ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஸ்ரீ ஆவணி-மீ 27-உ (11—9—1932) | மலர் 20.



விற்பனைக்குத் தயார். முந்துங்கள். விற்பனைக்குத் தயார்.

தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

அவர்கள் எழுதிய

## "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான மூகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஹு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

## Goshaye office pillss.

### கோஷாயி ஆபீஸ் மாத்திரை



——::——

உதவி டாக்டர் Dr. T. K. V Chalam. சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அறிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லறவாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல், மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுளளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். ஜுவரம், தைலஸ்னனம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

டாக்டர் *B. A.* எதிராஜ்,

[கால்ராபைரி]

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம்,தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## குஷ்டம்

வென்குஷ்டம் பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

## உங்கள் கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

Post Box No- 11413 "Sri" Works

Calcutta- (k) Beadon St. Calcutta.

# (Scientific Method and Ignorant Beliefs.)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(8)

## "தெய்வமாடல்" முதலிய துர்ப்பழக்கங்கள்.

குடங்களை சிங்காரித்து அவைகளை தலைமேலே நதிக்கொண்டு அதற்கு 'கரகம்' எனப்பெயரிட்டு தெருக்களில் ஆடித்திரியும் வேடிக்கையை நமது நாட்டில் அன்றாடம் பார்க்கலாம். அதனுடன் 'தெய்வம்' ஆடுவதுமுண்டு. தெய்வம் ஆடுவதென்றால் ஒரு புருஷனோ, பெண்ணோ தன்மேல் 'சாமி' வந்ததாக சாதாரண ஸ்மரணையை மறந்து, வேறுவிதமாக பேசுவதும், ஆடுவதுமான காட்சி 'சாமிஆடல்' அல்லது 'தெய்வமாடல்' என வழங்கும். இவ்விதமாக சில மனிதர்கள் நடிப்பதை மெஞ்ஞானத்தில் (Artificial hysteria) அதாவது தானே வரவழைத்துக்கொண்ட ஓர்வித வெறி என்பார். சாதாரண hysteria வில் மூர்ச்சை அடக்கி வலிவருவதுண்டு. காக்காய் வலி என்ற நோவும் இந்த நரம்பு நோவைப்பற்றியதே. அதேமாதிரியாகவே ஒருவன் தானாகவே இவ்வித வலியைவரவழைத்துக்கொள்ளலாம். இவ்வித வலியைத்தான் நமது நாட்டு பாமரஜனங்கள் 'சாமி ஆடுகிறது' 'சாமி பேசுகிறது' 'சாமி மூர்ச்சித்தது' 'சாமி மலைசாய்ந்துவிட்டது' என்று பயபக்தியோடு சொல்கின்றனர். இந்த வலியை வரவழைத்துக்கொள்வதற்குத்தகுந்த ஆடம்பரங்கள் செய்வதுண்டு. உடுக்கை, சிலம்பு, கரகம், வேப்பிலை, மேளம், தாளம், விபூதி, மணி முதலிய (Accompaniments) ஆடம்பரங்கள் கூடவே இருக்கின்றன. இத்தியாதி ஆடம்பரத்தில் சில நரம்பு வியாதியுடையோர் எளிதில் ஓர்வித மயக்கம் (Trance) அடைகினறனர் இவ்வித வலியில் (Excitement] விழுந்தோரை ஆயிரக்கணக்காக பார்க்கவேண்டுமானால் அல்லாசாமி பண்டிகைகளில் 'ஆலி' 'ஜூலா' என்ற சப்தத்திற்கு ஏற்றவாறு சிறிய பையன்களும் (work themselves into hysterics) இந்த மயக்கத்தை வரவழைத்துக்கொள்கின்றனர். அவர்கள் மேல் மஞ்சள் சாம்பிராணி தூளைவாரி வாரி எரிகின்றனர். அல்லாசாமி கோஷ்டத்தில் யாருக்குத்தான் இவ்வித வலிவுண்டாகாமல் இருக்கும்? ஒருவனைப்பார்க்க மற்றொருவனுக்கு தொத்துவியாதியைப்போல் (Infectious disease) இந்த 'வலி' தொத்திக்கொள்வதுண்டு. அதேமாதிரியாகவே இந்த பண்டிகையில் மாரடித்துக்கொள்ளும் பயங்கரமான காட்சியொன்றுண்டு. மூட நம்பிக்கையால் தங்களை மறந்து (Religious excitement) மதவெறியால் தூண்டப்பட்டு, இரத்தம் ஒழுக மாரை அடித்துக்கொள்ளுகின்றனர். ஒருவன் தானே கோபத்தை வரவழைத்துக்கொண்டு தன்னையே அடித்துக்கொள்ளும் பாவனையையொத்து இவ்வித 'தெய்வமாடலும்' 'சாமி ஆடலும்' மாரடித்துக்கொள்ளவும் என அறிக. இந்த விபரீத (Abnormal) நிலைமையில் உளரும் சொற்களை தெய்வவாக்கென நம்புகின்றார்கள்.

உண்மையாகவே ஒருவனுக்கு ஜன்னிநோய் பிறந்தால் தாறுமாறாக அவன் உளருவான். இவ்வித உளறலை பேயின் வாக்கெனக்கொள்வதுமுண்டு. காட்டுமிராண்டி நிலைமையில் நிற்கும் கூட்டங்களில் ஜன்னி கண்டவனை அடித்துக்கொன்றுமிருக்கின்றார்கள். ஆனால் தானே 'ஜன்னி'யை உண்டாக்கிக்கொண்டு உடுக்கை சிலம்புகளுக்குத் தக்கபடி ஆடிக்கொண்டு தாறுமாறாக உளருவானேயாகில் அதனை தெய்வவாக்காகக்கருதி அதன்படி நடக்க எத்தனிக்கின்றார்கள். 'அம்மா ஆடுகேட்கின்றாள்' என்றால் ஆடுகளை காவு இடுகின்றார்கள் 'கோழிகேட்கின்றாள்' என்றால் கோழிகாவு கொடுக்கின்றார்கள். இவ்விதமாக சில கொடூர செய்கைகளையும் 'அம்மா' சொன்னாளெனவும், 'சாமி' சொல்லிற்று எனவும் நம்பி செய்துவிடுகின்றார்கள். இத்தியாதி கொடிய மூடநம்பிக்கையால் சில இடங்களில் கொலைகளும் நடந்துமிருக்க படிக்கின்றோம். நான் இருக்கும் மீன்பிடிக்கும் குப்பத்தில் 40 வருஷமுன்பு எங்கள் பந்துக்களில் ஒரு பெண்ணானவள் பிள்ளை பெற்றபிறகு சரியான சிகிச்சையின்றி ஜன்னி (Tetanus) பிறக்கவும் அவளுக்கு பேய்ப் பிடித்துக்கொண்டதென்று 'தெய்வம் வந்தவள்' சொன்னதாக செருப்பாலும், முறத்தாலும் அந்த நோயாளியை அடித்துக்கொன்றார்கள். அதேமாதிரியாகவே நோயில் மெலிந்த பெண்களை 'தெய்வம்' ஆடுகின்றவள் சொல்லைக் கேட்டு அப்பெண்ணை கடலில் முழுக வைப்பதும் 'தெய்வம் ஆட' வைப்பதும், அடிதண்டமிட்டு நடக்கச்சொல்வதும், உடுக்கை சிலம்புடன் வெகுதூரம் நடந்து பிரார்த்தனை செலுத்துவதுமான கொடுமையான வேலைகளைச்செய்யச்சொன்னதின் பயனாக எத்தனை சிறுபெண்கள் மாண்டனர்! இத்தியாதி கொடிய பழக்கங்கள் மூடபக்தியால் நேரிடுவதைக்கண்டறிந்து அதனைப்போக்கும் நல்வழிகளைத்தேடாமல் 'சிவ சிவ' என்று முணமுணப்பதும் 'ஆன்மா' வுண்டா என்று வீண்வாதமிடுவதும் 'கர்மம்' வுண்டா என்று வாதிப்பதுமான பயனற்ற செயல்களைச்செய்து காலங்கழிப்பதா மானுஷீகமெனக் கேட்கின்றேன்?

சைவ கூட்டங்களிலும், வைணவ கோஷ்டியிலும், காலக்ஷேபங்களிலும், கிறிஸ்துவசபைகளிலும், புத்த கூட்டங்களிலும் • நமது புத்திக்கு எட்டாத கற்பனைகளைப்பற்றிப்பேசி வாதித்து வீண் காலத்தைக்கழிக்கின்றனரேயொழிய, மற்றபடி உயிரை இவ்வுலகில் வீணேமடியாமல் செய்வதற்கு வேண்டிய பரிகாரங்களைத் தேடிவுழைக்காத காட்சியைக்காண மனம் புண்படுகிறது.

துர்பழக்கங்களால் மடியும் மக்களுக்கு நமது நாட்டில் கணக்கே இல்லை எத்தனை குடும்பங்கள் இத்தியாதி மூடநம்பிக்கையால் நாசமடைந்தன! காட்டுமிராண்டிகள் பழக்கங்கள் [Savage practices) நாகரீக மற்ற வழக்கங்கள் (Barbarous Customs) உலகமெங்கும் அங்கு மிங்கும் பரவி இருந்தபோதிலும், நமது இந்தியநாட்டில் மாத்திரம் இக்கொடிய மூடபழக்கவொழுக்கங்கள் அதிகமாக நிறைந்துள. அரசாங்கமும், இம்மூட பழக்கங்களுக்கு ஜாடையாகவே இருந்து வருகின்றனர். கடுமையான சட்டதிட்டங்களால் இம்மகா பாதகங்களை தடுப்பதைக்காணோம். இதற்கொரு காரணமுண்டு. அதுயாதெனில் இம்மூடப்பழக்கங்களை மதச்சார்பாக அனுஷ்டித்து வருவதால் மதநடுநிலைமை (Religious Nuetrality) என்ற மூடதிட்டத்திற்கு விரோதமாகாமல் பார்க்கின்றனர். 'சதி' (Suttee) எனும் துர்ப்பழக்கத்தை சட்டதிட்டத்தால் நிருத்தினார்கள் (அதாவது உடன்கட்டை ஏருவதை சென்ற 100 வருஷத்திற்கு முந்திய தடுக்கப்பட்டது) என் தெய்வமாடுவதையும், காவுகொடுப்பதையும், விஷம் உண்ணுவதையும் கரகமாடுவதையும், குறிசொல்வதையும், கைபார்ப்பதையும், 'ஜாலிதூலா' வென்று மூர்ச்சித்துப்போவதையும் மந்திரதந்திரங்கள் செய்வதையும், பில்லி சூனியம் வைப்பதையும் (Witchcraft) நல்சகுனம், கெட்டசகுனமென்பதையும் சட்டதிட்டங்களால் நிருத்தலாகாது? உடன்கட்டை ஏரி மடிவது ஏகதேசம். ஆனால் சரியான சிகிச்சையின்றி இரத 'கும்பம்' போடுவதினாலும், தெய்வமாடுவதினாலும், மந்திரம் செய்வதினாலும் மடியும் ஏழைமக்கள் ஆயிரக்கணக்கென்று சொல்லலாம்! இதனை தடுப்பார் இவ்வுலகில் (இந்தியாவில்) யாருமில்லையா? சுயமரியாதையோருக்கு இதைவிட முக்கிய வேலை என்ன இருக்கின்றது?

குறிப்பு:—

### நமது நிருபர்களுக்குவிடை.

மெஞ்ஞான முறைவிஷயமாக சில மூடநம்பிக்கைகளைப்பற்றிஇதுகாறும் எழுதிவந்தோம். எவ்வளவு அளவாகப் பத்திரிக்கைகளில் எழுதவேண்டுமோ அந்த அளவுடன் எழுதி வருகின்றோம். பத்திரிக்கைகளில் எழுதுவது ஏனெனில், பாமர மக்களும், மூட நம்பிக்கையுடையோரும், குறிப்பாக அறிந்து கொள்ளும்படியே, எழுதப்படுகின்றன. பத்திரிக்கைகளில் அவ்வளவுதான் எழுத முடியும் அதற்குமேல் தெரிந்துகொள்ள ஆவலுடையவர்கள் அந்தக் குறிப்புகளுக்கு ஆதாரமான நூல்களை வாசித்தறியவேண்டும். இதுதான் அறிஞர்களின் கடமையாகும். அந்தந்த விஷயத்திற்குரிய ஆதார நூல்களை கட்டுரைகளில் கண்டுள்ளோம். பெரும்பான்மையான நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. அவைகளை வேண்டியவர்கள் வாங்கி ஆங்கிலம் படித்தோரைக்கொண்டு விபரமாக நாம் எழுதிவரும் கட்டுரைகளில் குறித்துள்ள விஷயக் குறிப்புகளைத் தெரிந்துகொள்ளலாம். இவைகளைச் செய்யாமல், கண்டபடி எல்லாம் நமக்கு நேராக ஆண்மா உளதா? ஏசுவே கர்த்தா? நெருப்பு மிதிப்பது தெய்வீகமா? இன்னும் பல மூட நம்பிக்கைகளைப்பற்றி கேள்வி கேட்பதும், அந்தக் கேள்விகளுக்கு விடை கொடாவிடில் எழுதியதை வாப்பீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று பயமுறுத்துவதும் யோக்கியப் பொருப்பு அற்றதாகும்.

உரையூரிலிருந்தும் ரங்கூன், டர்பான் (Natal) முதலிய இடங்களிலிருந்து இவ்வித கேள்விகள் வந்திருக்கின்றன. பொதுவாக இத்தியாதி கேள்வி எல்லாம் எழுதிவருவதைக் கவனித்துப் படிப்பார்களேயாகில் பிறந்திரு. ஆன்மா, மனம், சித்தம், விஞ்ஞானம் (Consciousness] முதலிய கற்பித சொற்களுக்குப் பொருள் இல்லை என்பதைக் குறிப்பாக [Behaviourism] அதாவது 'நடத்தை' என்ற கட்டுரையில் எழுதியுள்ளோம். நெருப்பின்மேல் நடப்பது தெய்வீகமும் அல்ல, ஆச்சரியமும் அல்ல என்பதைக் குறிக்கக் "குடி அரசி"ல்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க,

# வகுப்புப்பிரச்சினை முடிவு.

"அடுத்துவரும் இந்திய அரசியலை நடத்துவதற்கேற்ப பல முரண்பாடான கோரிக்கைகளுக்கிடையில் இந்திய சமூகத்தார்க்கு நியாயமும், ஒழுங்கும் பொருந்த மிகவும் கஷ்டத்தோடு இத்திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நேர்மையான திட்டத்தை காணும்படி பல முறைக் கேட்டுக்கொள்ளப்பட்டும் தங்களால் முடியாதென கைவிடப்பட்ட விஷயம் இது என்பதை இதைப் பரிசீலனை செய்யும் இந்தியர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதுவிஷயத்தை இந்தியர்களே தக்கபடி முடிவுசெய்யக்கூடும். அரசியல் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் சமூக ஒத்துழைப்பு அவசியமென்பதை இந்நெருக்கடியான சமயத்திலேனும் இந்திய சமூகத் தலைவர்கள் நன்குணர்ந்து புதிய அரசியலின் பொறுப்பை ஏற்று நடத்த முன்வரவேண்டுகிறேன்.

என்ற வேண்டுகோளோடு வெளிப்பிடப்பட்டிருக்கும் முதல் மந்திரியின் சமூகப் பிரச்சினைத் தீர்ப்பு ஏகதேச அளவில் யாரும் குற்றஞ் சொல்லக் கூடியதாக இல்லை, இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாண இந்தியத் தலைவர்கள் பல முறை முயன்றும் இறுதியில் தங்களால் சாத்தியப்படாதென அதை திரு. மாக்டொனால்டுவினிடம் ஒப்படைத்தனர். சமூகப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கூறும்படி தன்னிடம் ஒப்படைப்பது மிகவும் மானக்கேடான காரியமென அவர் அப்போதே கூறியும் அவரின் முடிவிற்கே இந்தியத் தலைவர்கள் தவங் கிடந்தனர்.

பஞ்சாயத்துச் செய்வதைப்போல கஷ்டமான ஒரு வேலை இந்த உலகத்தில் இல்லவே இல்லை என்றுகூட சொல்லிவிடலாம். சகலரும் ஒப்ப பஞ்சாயத்து செய்வதென்பது முடியாத காரியம். பெரிய பங்கு வேண்டுமென அடித்துக்கொண்டு நிற்பது மனித சுபாவம். அப்போது நியாயமாகக் கூறப்படும் முடிவுகளும் புறக்கணிக்கப்படுகின்றன. அதனால் பஞ்சாயத்தார் நிலை பரிதாபகரமாக முடிகிறது, பல்லோரால் வெறுக்கப்படுகின்றது என்ற விஷயங்களை எல்லாம் நன்றாய் அறிந்த திரு. மாக்டொனால்டே தைரியமாக ஒரு முடிவைக் கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் ஒன்றைத் தவிர நியாய புத்தியுடைய இந்தியர் அனைவரும் இம் முடிவை ஒரு முகமாய் ஏற்கவே செய்வர். தனித்தொகுதி தேர்தலே நேர்மையுடையதெனத் திட்டமாய்க் கூறிவிட்டதுடன் பெண்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் மிராசுதார்கள், சர்வகலாசாலைகள் முதலானவைகளுக்கு விசேஷ ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

காங்கிரஸ் கூப்பாடு போட்ட பொதுத் தொகுதி குழி வெட்டிப் புதைக்கப்பட்டுவிட்டதென்பதை திரு. மாக்டொனால்டுவின் முடிவு திட்டமாய் கூறுகிறது. மத வெறியும், சமூகக் கொடுமைகளும், சமயச் சண்டைகளும், பிறப்பில் வித்தியாசங்களும் நிறைந்துள்ள இந்திய நாட்டிற்குப் பொதுத் தொகுதித் தேர்தல்நேர்மையுடையதென அறிவுடைய மனிதர் யாருமே நினைக்கமாட்டார்கள். மத வெறியும், சமூகக் கொடுமைகளும் ஒழியும்வரை தனித் தொகுதி தேர்தலைத் தவிர வேறு எதுவும் பலனுடையதாக இருக்க முடியாதென்பதும் நிச்சயம். மதவெறியையும், சமூகக் கொடுமைகளையும் ஒழிக்கக் காங்கிரஸ் எம் முயற்சியும் செய்யாது வெறும் பொதுத் தொகுதி கூப்பாட்டை மட்டில் போட்டுக்கொண்டிருப்பதில் பயன் எதுவுமில்லை. காங்கிரசும்; காந்திஜியும் சமூகக் கொடுமைகளையும், மத வெறியையும் ஒழிக்க தீவிரமாய் முனைந்தால் காங்கிரஸ் சீர்குலைந்து சின்னாபின்னப்பட்டுப்போம் என்பதை யாரும் ஒளிக்கமுடியாது. முப்பத்தைந்தரைக் கோடி இந்தியர்களும், முப்பத்தைந்தரைக்கோடி காந்திகளாயிருந்தால் பொதுத் தொகுதி தேர்தலை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் ஆட்டின் குரல் வளையைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சக் காத்துக் கிடக்கும் நரிகளைப்போல் ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகத்தின் இரத்தத்தை உறிஞ்சுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கும் இந்திய நாட்டிற்கு பொதுத் தொகுதி வழங்குவது ஆட்டைப்பிடித்து நரியிடம் ஒப்படைப்பதற்கே ஒப்பாகும். ஆகையினாலேயே திரு. மாக்டொனால்டுவின் தனித் தொகுதித் தீர்மானத்தை நாம் மனமார வரவேற்கிறோம்.

அடுத்தது ஸ்தானங்களைப்பற்றிய தகராறு. அந்தந்த மாகாண ஜனத்தொகைகளுக்குத் தகுந்தபடி ஸ்தானங்கள் இருக்கவேண்டுவதே நீதியாகும். ஆனால் சீக்கியரும், முஸ்லீம்களும் அதிகப்படியான ஸ்தானங்களை கோருவது எவ்வகையிலும் நியாயமாகாது. இவர்கள் அதிகப்படியான ஸ்தானங்களுக்கு ஆசைப்பட்டால் அது ஆபத்தாகவே முடியுமென்றும் பயப்படுகிறோம். இதுவிஷயத்தில் திரு. மாக்டொனால்டுவின் தீர்ப்பும் ஏற்புடையதாகவே இருக்கிறது.

இந்தியா மந்திரி சர். சாமுவேல் ஹோர் வெளியிட்ட அறிக்கையால் புண்பட்டுக்கிடக்கும் இந்தியர்களுக்கு திரு. மாக்டொனால்டுவின் சமூகத் தீர்ப்பு ஒரு ஆறுதலைக் கொடுக்குமென்று நம்ப இடமிருக்கிறது. ஏனென்றால் பொறுப்புணர்ந்த இந்தியத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நியாயமமைந்ததாக திரு. மாக்டொனால்டுவின் தீர்ப்பு வெளிவந்திருக்கிறது. முயலுக்கு மூன்று கால் என்னும் முரட்டுப் பிடிவாத குணமுடைய காங்கிரஸ் இந்த நியாயத் தீர்ப்பை கண்டிக்கவும் பின்னடையப்போவதில்லை என்பதை நாம் அறிவோம். காங்கிரசைத் தவிர மற்றவர்கள் செய்யும் எம் முடிவையும் அது சரியோ, தப்போ எதுவானாலும் கண்டித்துத் தீரவேண்டியதே தமது கடமையெனக் காங்கிரஸ் மேற்கொண்டிருக்கையில் திரு. மாக்டொனால்டுவின் தீர்ப்பை மட்டில் அது எப்படிக் கண்டிக்காதிருக்கமுடியும்? தனது மாமூல் வழக்கப்படி காங்கிரஸ் இத் தீர்ப்பை கண்டிப்பதைவிட நேர்மையான இத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுமேயாகில் வகுப்புச் சச்சரவுகள் ஒருவகையில் அடங்க இடமுண்டு, அதற்கு மாறாய் காங்கிரஸ் இதை ஏற்றுக்கொள்ள மறுக்குமேயானால் வகுப்புப் பிரச்சினையை சமரசமாய் தீர்த்துக்கொள்வதில் காங்கிரசிற்கு அபிப்பிராயம் இல்லை என்பதை நிரூபணம் செய்வதாகும்.

அண்ணன் தம்பிக்குள் அடித்துக்கொண்டு அயலாரைப் பஞ்சாயத்து செய்து வைக்கும்படி அழைக்கும் இந்தியரின் வாடிக்கைப்படி வகுப்புப் பிரச்சினை திரு. மாக்டொனால்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது மிகவும் மானங்கெட்டதனமென் அன்புற அவரும் கூறினர். அண்ணன் தம்பி விவகாரத்தில் தாங்கள் தலையிடுவது தகுதியல்லவெனப் பல முறை வற்புறுத்தி வற்புறுத்திக் கூறினார். எனினும் தீராப் பொதியாக அது அவர் கையிலேயே ஒப்படைக்கப்பட்டது. அவரும் இயன்றளவு முயன்று சமரச நோக்கமுடைய அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரு முடிவைக் கூறியிருக்கிறார். இம் முடிவை ஏற்றுக்கொள்ளாமலும், அல்லது நமக்குள்ளே ஓர் சமரச முடிவை தேடிக்கொள்ளாமலும் வீண் வம்புகளை வளர்த்திக்கொண்டே இருந்தால் உலகத்தார் நம்மைப் பற்றி என்ன அபிப்பிராயங் கொள்வார்களென்பதை நாம் விளக்கத் தேவையில்லை.

(முன்னேற்றம்)

## தமிழ்நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கம். 3-மணமகன் தேவை.

சோழிய வேளாளர் வகுப்பில் தோன்றியவரும், 17-வயதுடையவரும், 5-வது வகுப்புவரை படித்தவருமாகிய ஓர் விதவைப் பெண்ணுக்கு மேற்படி சமூகத்திலேயே தோன்றிய ஓர் மணமகன் தேவை.

மணமகன்-- 25-வயதிற்குட்பட்டவராகவும், கல்வி கற்றவராகவும் சம்பாத்தியமுடையவராகவும் இருத்தல் அவசியம்

2. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவரும், கல்வி, கற்றவரும் சீர்திருத்தத்தில் ஆர்வ மிக்கவருமாகிய 20-வயதுடைய ஓர் பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்— கல்விகற்றவராகவும் சம்பாத்தியமுடையவராகவும், 25-வயதிற்குட்பட்டவராகவும், பூரண சுயமரியாதைக் கொள்கையைப் பின்பற்றக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும்,

3. மராட்டிய வகுப்பில் உதித்தவரும் கல்வி கற்றவரும் 19-வயதையுடையவருமாகிய ஓர் விதவைப் பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்-கல்வி கற்றவராகவும் தொழில் உடையவராகவும் இருத்தல் அவசியம்.

குறிப்பு:—மேலேகண்ட மூன்று பெண்களுக்கும் மணமகன் தேவை. விருப்பமுள்ளவர்கள் அவரவர்களுடைய நிலைமையை நன்கு விளக்கி விபரமாக எழுதவேண்டும். கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும். பதிலுக்கு தபால் தலைகள்வைத்து அனுப்பவேண்டும். திருமணச் சங்கச் சார்பில் சிக்கனமுறையில் நடைபெறும். விலாசம்:—

தமிழ்நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கம், 22. பாளையம்பஜார்,
உறையூர் போஸ்டு, திருச்சி.

## நாகை சுயமரியாதைசங்கம் வாராந்திரக் கூட்டம்.

சங்கத் தலைவர் தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் இச் சங்க வாராந்திரக் கூட்டம் 4—9—32 ந் தேதி கூடிற்று. தோழர்கள் வி. சாமிநாதன், ஜி. சீனிவாசனு, எம். ஏ. கோவிந்தசாமி முதலியவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடியபின் "அன்னிய ஆட்சியால் இந்தியாவிற்கு பலனுண்டா" என்பதுபற்றி தோழர்கள் ஏ. கோவிந்தன், வி. சாமிநாதன், எம்; ஏ. கோவிந்தசாமி, கே. முருகேசன் முதலியவர்கள் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையாக, இன்றுவரை "அன்னிய ஆட்சியால் நம் மக்கள் அடைந்திருக்கும் விஷயங்களை விரிவாக எடுத்துக் கூறியவுடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் 8-மணிக்கு முடிவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கலப்பு மணத்தால் தான் ஜாதிஒழியும்.

# திரை மறைவில் நடப்பவை.

## C. I. D.

### மல்லாந்து படுத்து எச்சில் துப்பாதே.

"சுயமரியாதைக் காரன் என்றால் பெண்டாட்டியைக்கூட்டிக்கொடுக்க வேண்டுமே!" என்றார் ஒரு படித்த எம். எ . . . ஸி. மற்றொரு படித்த கன . . . யானைப்பார்த்து, இவ்விதம் கேட . . . அவரே தன்னைக்கொஞ்ச கால . . . மாய் சுயமரியாதைக் காரன் எ . . . ன்று சொல்லிக்கொண்டு வந்த . . . தும் எனக்குத் தெரியும். அப்படியானால் அவர் அதே குற்றத்திற்கு சிறிது காலம் ஆளாயிருந்தார் என்று கொள்ளவேண்டியதுதானே? அதைப் பற்றி எனக்குக்கோபமோ, கவலையோ இல்லை. ஏனென்றால் இதைவிட வேகமாக நம் இயக்கத்தைத் தூஷிப்பதை யெல்லாம் கேட்டுக்கேட்டு சுயமரியாதைக்காரர்கள் உடம்பில் வயிரம் பாய்ந்துபோயிருக்கிறது என்பது எனக்குத்தெரியும். ஆனால் இதை ஏன் இங்கு எழுதவேண்டுமென்றால், உத்தியோக ஆசையும், பணத்தாசையும் வந்ததும் அவைகளோடு அயோக்கியத்தனமும், நன் . . . கூட . . . ன்றிகெட்ட தன்மையும் கூடவே வ . . . ந்துவிடும் என்பதற்கு ஷை . கன . . . வானே அத்தாட்சியாக விளங் . . . குகிறார் என்பதற்காகவே, ஷை கர . . . புக்கரசர், ஒரு ஆஸ்திகர் மதத்தில் அதிக பற்றுக்கொண்டவர் அவரை ஊரே திட்டிய காலத்திலும் "அயோக்கியர்" என்று ஆங்கிலேயருடைய சட்டம் தீர்மானித்த காலத்திலும் அவருக்குப் பரிந்து பேசியது சுயமரியாதைக்காரர்கள்தான் என்பதை அவர் மறந்து விட்டார். மேலே கூறிய வார்த்தைகளுக்காக அவரிடம் கோபமில்லாவிட்டாலும், அவருடைய நன்றிகெட்ட தன்மைக்கும் இழிகுணமான மனப்பான்மைக்கும் சுயமரியாதைக்காரர்கள் இரங்குகிறார்கள். இது விஷயமாக சுயமரியாதைக் காரர்களிடத்தில் அதிக பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் பலன் என்னவாகும் என்பது இனிமேல்தான் தெரியும். இவர் ஒரு பொதுஜன ஊழியராயையால், தனது அழிவைத்தானே தேடிக்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கிறேன்.

ஃ ஃ

### பழிக்குப்பழி வாங்குதல்.

"3500 ரூபாய் செலவழித்து நாம் மகாநாடு நடத்த 300 பேர் வந்து சுயமரியாதை மகாநாடாக்கி விட்டுப் போய் விட்டார்களே," என்று ஆத்திரத்தோடு கூறினார் ஒரு லிங்கங் கட்டியார். மற்றொரு தமிழரைப்பார்த்து, அதற்கு அவர் . . . "இதென்ன . . . ம சான்றோர், . . . யும் பாழாசி . . . ஆச்சரியம் 3500 ரூபா . . . 7—8 பேர் கொட்டை . . . ளே' . . . அறுத்தெறிந்து விட்டார்க . . . ! கொட்டையை அறுப் . . . பதற்கா . . . வா இத்தனை சிரமப்பட்டோம்!" என்றார் மற்றொருவர். "சுயமரியாதைக்காரர்களுக்குப்படிப்பில்லை; பணமுமில்லை; அவர்களால் என்ன செய்ய முடியும் என்றார் ஒரு Bar-at-Law "தம்பீ! தமிழர் மகாநாட்டுக்காரர்களைக் கேளப்பா," என்கிறேன் நான்! படிப்பு வேறு, அறிவு வேறு; பணம் வேறு, பலம் வேறு; படிப்புள்ளவருக்கெல்லாம் அறிவிருக்கமுடியாது, பணமுள்ளவர்களுக்கெல்லாம் பலமிருக்கமுடியாது. . . . கல் மகாநாட்டில் தமிழ் ெ . . . தமிழர் சத்துக்கள் அவ்வள . . . லக்கியத்தின் இருந்தனர். . . . பும் மேடைகளில் தமிழில், ப . . . ஆனால் கொச்சைத் சுயமரி . . . கொச்சையாய்ப் பேசியது 3 . . . யாதைப் பெண்கள். "கடவு . . . "ப்பற்றி பொது மேடையில் பாட்டுப்பாடக்கூட முடியாத ஒரு நிலைமை தமிழ் நாட்டில் வருமென்று நமது தமிழ்ப் புலவர்கள் கனவுகூட கண்டிருக்கமாட்டார்கள். "நாத்திகப் பேசும் சழக்கரை வாட்டிடும் நாத்திறம் படைத்த நாயகா வருக! என்று பெரிய எழுத்தில் பெரிய தட்டில் கட்டியிருந்ததை அறுத்தெறிந்து கிழித்தழிக்கும் காலமும் வரும் என்று யார்தான் நினைத்திருப்பார்கள்! 'இவ்வாக்கியங்களை எனது வரவேற்புப் பத்திரத்திலிருந்து எடுத்துவிட ஒத்துக்கொள்ளுகிறேன்,' என்று ஒரு ஆஸ்திகரே பொதுமேடையில், சொல்லும் காலமும் வரும் என்று எந்தச் சைவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஒரு வேளை புத்தமதத்தை அழித்ததற்கும், சமணர்களைக் கழுவேற்றினதற்கும்பழிக்குப்பழிவாங்கப் படுகிறதோ என்னவோ தெரியவில்லை.

ஃ ஃ

### Geometry உபாத்தியாயர்.

தோழர் (சுவாமி) வேதாசலம் அவர்கள் தன்மகளுக்குச் சிலமாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கல்யாணத்தின் போது, மணமக்களுக்கெதிரே ஒரு ஓங்காரம் (ஓ) போட்டு, அதற்குள் ஒரு முக்கோணம் [Triangle] போட்டு, அதற்குள் ஒரு வட்டம் போட்டு, அதற்குள் தீயிட்டு வளர்த்து திருமணம் நடத்தினாராம். இவைகளுக்கு சில தத்துவார்த்தங்களும்கூட கூறினாராம். அவர் அங்கே Geometry class நடத்தினாரா . . . அல்லது கல்யாணம் நடத்தினா . . . என சிலர் சந்தேகிக்கலாம். . . . சி. ஐ. டி. யாகிய நான் உண்மை" . . . யைச் சொல்லுகிறேன். கல்யா . . . ம் தான் நடத்தினார்: Geometry class அல்லவெ . . . று. தோழர் வேதாசலம் பெரி . . . பாளி; அவருடையபடிப்ப . . . யன் . . . ய யடிப் . . . கம். . . . ற்கு வணக் . . .

ஆனல், அம்ப . . . பா அவர்கள் . . . ல், தோழர் செல்லப் . . . மணம் . . . தன் மகளுக்குத் திருமணம் நடத்தியபோது, முக்கோணமும் . . . இல்லை; ஓங்காரமும் இல்லை; ஓமமும் இல்லை; தத்துவார்த்தமும் இல்லை; தோழர் செல்லப்பா . . . அவர்களும் ஏதோ கொஞ்சம் . . . படித் . . . தவர் தான், அவருக்கும்-என் . . . எல்லாருக்கும் தத்துவார்த்தம் செ . . . யும்ஆனல்தத்துவார் . . . சொல்லத்தெரி தறிவுஒப்புக்கொ . . . தங்களைப் பகுத் தமிழர்வேதாசல . . . வதில்லையே! தோ . . . திற்கும், . . . அவர்கள் முக்கோணத் எழு . . . வட்டத்திற்கும் 'ஓ' என்ற . . . திற்கும் மாத்திரம் தத்துவார்த்தம் சொன்னார்கள். ஆனல் நான் Geometry யில் உள்ள எல்லா உருவங்களுக்கும், உலக பாஷைகளில் உள்ள சகல எழுத்துக்களுக்கும் தத்துவார்த்தம் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனல், கேட்பதற்கு மட்டும் எந்த சோம்பேறியும் வரமாட்டேன் என்கிறான் "சுவாமி" வேதாசலம் சொன்னல் கேட்பார்கள். நான் சொன்னல் கேட்பார்களா?

ஃ ஃ

### வந்தாளே சந்திக்கு.

தஞ்சாவூரில் நடைபெறப் போகிற பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் அநேக விசேஷ சம்பவங்கள் நடைபெறப்போகின்றனவாம். முதலாவது தலைவர் போட்டி;-இரண்டாவது தேர்தல் விவகாரங்கள்; இந்த விதமாகப் பல பெரிய விஷயங்கள் உண்டாம். அதிலே ஒரு துக்கடா. அதாவது 'ஜஸ்டிஸ் கட்சியானது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை அப்படியே ஒப்புக்கொள்கிறது,' என்ற தீர்மானத்தையாரோஒருவர்கொண்டு வரப்போகிறாராம். இந்த விஷயத்தை இரண்டிலொன்று பார்த்துவிடுவதென்றே அநேக சுயமரியாதைக்காரர்கள் மகாநாட்டிற்குப் போகப்போகிறார்களாம். இதைக் காற்றுவாக்கில் கேள்விப்பட்ட சில ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுடைய நாடிகள் வெகுவேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றனவாம்!

ஃ ஃ

### நமது தாத்தா.

ஆனல், அதற்குள் நமது தாத்தா வந்து விடுவாரே! அவரும் வந்துவிட்டால் பெட்ரோலும், நெருப்பும் சேர்ந்தது போல் ஆகுமே என்று சில வைதீகர்கள் அஞ்சுகிறார்களாம்! 'ஐயையோ! வருகிறானா?' என்று பார்ப்பனர்கள் கதறுகிறார்களாம். 'வருவதற்குள் பூணூலை அறுத்தெறிந்து விட்டு நல்ல பிள்ளைகளாகிவிடுங்கள்,' என்று சிலர் புத்திமதி கூறுகிறார்களாம்.

---

கூந்தகுள . . . சுயமரி" . . . வி . . . ம் சிலையம் . . . யாதை வித்தியா . . . ர்த்தி வாசகசாலை

### முதலாவது வருடநிறைவுவிழா.

26—8—32 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு "கூந்தகுளம் சிலையம் சுயமரியாதை வித்தியா விர்த்தி வாசகசாலை" யின் முதலாவது வருடநிறைவுவிழா வாசகசாலையின் முன்பு அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட அழகி . . . ப பந்தலின் கண் திருவாளர் ஏ. ஜான்தேவசகாயம் பி. ஏ., அவர்கள் தலைமையில் நடை பெற்றது. அவ்வமயம் பலயிடங்களிலிருந்தும் சுமார் 300 பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். வாசகசாலை மாணவர்களால் சுயமரியாதைக்கீதங்கள் பாடப்பட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வாசகசாலை ஹெட்மாஸ்டர் எம். சுவாமிதாஸன் அவர்களால் தலைவர் அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தபின் தலைவர் முகவுரைக்குப்பின் திருவாளர்கள் ஏ. அருணாசலம் அவர்களும், வி. எஸ். ராஜன் அவர்களும், பி. இ. பண்டாரம் அவர்களும் எம். வேதமுத்து உபாத்தியார் அவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையாக "திருநெல்வேலிஜில்லாவில் சுயமரியாதைவாசகசாலை யென்று தீர்த்தப்பட்டாருக்குள் நியமிக்கப்பட்டிருப்பது இது ஒன்றேயாகும். வாசகசாலையின் முதலாவது ஆண்டு நிறை விழாவை ஜாதி இந்துக்கள் நிறைந்த இப்பகுதியில் இவ்வளவு சிறப்பாகவும், ஊக்கமாகவும் நடத்துவதற்காக நான் பெருமகிழ்சியடைகிறேன். வருங்காலங்களிலும் விடாமுயற்சியாக வாசகசாலையை உன்னத நிலமைக்குக்கொண்டுவர வேண்டியது முக்கிய கடமையாகும்" எனசுமார் அரைமணி நேரம் மிகவும் உருக்கமாகப்பேசி முடித்தார். இறுதியில் சிற்றுண்டி பரமார கூட்டம் கலைந்தது.(ஒரு நிருபர்)

---

### வீரவநல்லூர்.

இன்று காலை 9-மணிக்கு திருவாளர் பூ. ராமையாவுக்கும், திருமதி பொன்னம்மாளுக்கும் விதவாவிவாக சபை காரியதரிசியும், ஹானரரிமேஜிஸ்டிரேட்டுமான திரு. வி. எஸ். என். சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் யாதொரு சடங்குகள், மூடப் பழக்க வழக்கங்களில்லாமல் சுயமரியாதைக் கொள்கைப்படித் திருமணம் நடந்தது. அச்சமயம் திரு. ந. பிச்சாண்டி முதலியார் அவர்களும் திரு. ஆறுமுக முதலியார் அவர்களும் சுயமரியாதைத் திருமணம் என்பதுபற்றிப் பேசினார்கள். தலைவர் "சிக்கனம்" என்பதுபற்றிப் பேசி முடிந்தபிறகு சந்தனம், தாம்பூலம் பரிமாறி சமபந்திபோஜனம் நடைபெற்றது. சுயமரியாதை அன்பர்கள் சுமார் 300-பேர்கள் விஜயஞ்செய்திருந்தது பாராட்டத்தக்கது.

Best copy available

பகுத்தறிவைக்கல்லுகின்றன.

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

கடவுள் வெறியும், மதவெறி
யுங்கொண்டவன் எத்த
கைய அறிவியல் நூல்களைக்கடறக்
கற்றிருப்பினும், தம் மத நூல்களில்
கடவுள் என்பவர் தம் பகுத்தறிவிற்கு
மாறாக ஒன்றைக்கூறியிருப்பதாக
படித்திருந்தால் தம் பகுத்தறிவு
கூறுவது தவறென்றும், கடவுள் கூறி
யது அல்லது தம் சமயப்பெரியார்
கூறியவைகளே சரியென்றும் நம்பு
கின்றான். மத நூல்களில் கடவுள்
கூறியதாக கூறியிருப்பது அறிவிலார்
கடவுள் பெயரால் கூறியிருக்கும்
இஃதோர் கட்டுரையென்றும், இஃது
பகுத்தறிவிற்கு சற்றேனும் பொரு
த்தமற்றதென்றும் எவனாவது கூறி
னால் உடனே ஆஸ்திக வெறியர்கள்
அவனையும், அவனது பகுத்தறிவை
யும் குறைகூறி பொது ஜனங்கள்
அவன்மேல் துவேஷமுண்டாகும்
படி கூறி, கூடுமானால் அவனைக்
கொலை செய்யவும் தூண்டிவிடுகின்ற
னர். பி. ஏ., எம். ஏ., பட்டம் பெ
ற்று உயர்ந்த அறிவியல் நூற்களைக்
கற்றவனாயினும் ஆஸ்திக வெறிகொ
ண்டவனாயிருப்பின் இந்துமத புரா
ணத்திற்கூறியபடி ஆயிரத்தெட்டு
அண்டங்களையும், நூற்றெட்டு சதுர்
யுகமாண்ட சூரபத்மனென்னும் அர
க்கர் குல அரசன் கால், கை, முகம்,
கைமுதலிய உறுப்புகளையுடைய
சூரியனாகிய உயிர்ப்பிராணியைப்
பிடித்து வந்து தன் மகன் பானு
கோபன் தொட்டிலில் கொண்டு
வந்து கட்டியிருந்தான் என்றும்,
அவனுக்கு மனைவி மக்கள் முதலிய
சுற்றத்தார் உண்டென்றும், சூரியனா
கிய தேவன் ஆகாயத்தில் ஏழுபச்சை
க்குதிரைகள்கட்டிய இரதத்தின் மேல்
ஏறிச்செல்கிறான் என்றும், அவனு
க்கு ஓர் கண்ணில்லையென்றும், தக்க
னுடைய யாகத்தில் அவனுடைய
பற்கள் பிடுங்கப்பட்டதென்றும், அவ்
வாறே சந்திரனும் மனுஷரூபமுடைய
வனென்றும், தாரகை என்னும் தன்
குருவின் மனைவியை இச்சித்து
அவன் ஒளிமழுங்கி பின் இப்பொ
ழுதேபோல் அமாவாசையிலிருந்து
ஒளிவளரும்படி விமோசனம் பெற்
றான் எனவும், சூரியனையும் சந்திரனை
யும் இராகுகேது என்னுமிருபாம்பு
கள் விழுங்கிவிட்டுவிடுகிறதென்றும்,
அவ்வாறு சூரிய சந்திரனைக் கடிக்கும்
விஷம் மனிதர்மேலும் வந்து சாரும்
எனவே அப்பொழுது ஸ்நானம்
பண்ணவேண்டும் என்றும், கூறிய
வைகளை நம்பி நடந்து வருகின்றார்
கள். அவ்வமயம் ஒருவன் சூரியன்
ஓர் அக்கினிகோளம் அதன் சமீபத்
தில் எவராலும் செல்லமுடியா, பூமியி
லிருந்து சூரியனை நோக்கி 100மைல்
ஆகாயக்கப்பலில் போவதற்குள்ளே
உஷ்ணத்தால் ஆகாயக்கப்பல் புகை
யாய் போய்விடும், பூமிக்கும் சூரியனு
க்குமுள்ள தூரம் 93 மிலியன் மைல்
கள், அதன் குருக்களவு 865, 500
மைல், அஃது பூமியைவிட 330000
பங்கு பெரியதென்று கூறினால் வை
தீகனாகிய எம். ஏ. பட்டம் பெற்ற
அறிஞன் அவன்மீது தன்பகுத்தறி
விழந்து நாய் போற்சீறி நமதுவேதம்
பொய்யா? வெள்ளைக்காரன் என்ன
கண்டான்? நமது பெரியவாள் வார்த்
தையை பொய்யென்று கூறலாமா
அம்மம்மா! கலிகாலம் என்று கூறி
விட்டு சிவ சிவ என்று இவன்
கூறிய வார்த்தைகளைச் செவிகளி
லேற்காது காதைப்பொத்திக்கொள்
கின்றான். ஆஸ்திக வெறிகொண்ட
மனிதன் சுகாதார உத்தியோகஸ்தன்
(Health officer) ஆயினும்
கோயிலுக்குப்போய் நல்ல காற்றும்,
வெளிச்சமுமில்லாத கோயிலினுள்
சென்று பலமணி நேரம் நிற்கவும்,
அங்குள்ள அற்பமான பிராணவாயும்
அங்குள்ளபெரிய கூட்டத்தினரால்
கரிவாயுவாக்கப்பட்டு அதைப்பல
மணிநேரஞ் சுவாசஞ் செய்யவும்,
புரோகிதப்பார்ப்பான் மலஜலங்களை
யெல்லாம் மிதித்துக்கொண்டுவந்து
தண்ணீர் எடுத்துவந்து விக்ரகத்தின்
மேல் ஊற்ற அத்தண்ணீர் புரோகித
ப்பார்ப்பான் காலில்பட்ட அவன்
காலிலுள்ள அழுக்கு மலஜலம் முத
லியவைகளைக் கரைத்துக்கொண்டு
பலவருடங்களாய் தீர்த்தத்தண்ணீர்
தேங்கி புழுக்கள் பல மலிந்திருக்கும்
தீர்த்தத்தொட்டியில் விழுவதையு
மறிந்தும், பகுத்தறிவை யிழந்து
வாயிலூற்றிக்கொள்வதையும், தலை
யில் தெளித்துக்கொள்வதையும்
ஒவ்வொரு கோயிலிலும் நாம் கண்
டும், கேட்டும் வருகின்றோம். மேலும்
எத்தனையோ அரசாங்கஉயர்தர உத்தி
யோகஸ்தர்கள்கூட தங்கள் வீடுகளில்
நடக்கும் சிரார்த்த தினங்களில் பஞ்ச
கௌவியம் சாப்பிட்டுத்தானே வரு
கின்றார்கள் பஞ்ச கௌவியம் என்
றால் பசுமாட்டின் சாணி, மூத்திரம்
பால், தயிர், நெய் முதலியவைகள்
என்று எல்லோரும் அறிந்திருந்தும்,
மதவெறியன்றோ பகுத்தறிவையிழக்
கச்செய்து மாட்டுச்சாணியையும்
மாட்டு மூத்திரத்தையும் சாப்பிடச்
செய்யும்படி செய்கிறது. இதற்கு
சில ஆங்கில பட்டதாரிகள் மேனா
ட்டு அறிஞர்கள் கூறியிருப்பதாக
சிலர் ஏமாற்று மொழிகளைக்கூறி
இப்படிச்சாப்பிடுவதில் உடலுக்கு
மிகவும் நன்மையென்று நாட்டு மக்
களை ஏமாற்றி வரும் புரட்டை நினை
க்க நினைக்கவே மிக வேடிக்கையாக
யிருக்கிறது. இன்னும் மக்கள் அறி
வைப்பாழ்படுத்தும் புராணக்கூற்று
க்களிலுள்ள இத்தகைய ஆபாசங்களை
நாம் எடுத்துக்கூறி இவைகளைப்பகுத்
தறிவிற்குப் பொருத்தமற்றதெனக்
கூறினால் மத நம்பிக்கையற்ற அனே
வருமே இத்தகைய மூடச்செயலை
அறவே வெறுக்கின்றனர். ஆனால்
மதப்பைத்தியம் பிடித்த மக்களோ
நாம் சொல்வதின் உண்மையை ஒப்
புக்கொண்டாலும் மதப்புத்தகங்கள்
அவர்களறிவைச்சிறிது நேரத்தில்
மாற்றி கடவுள் வார்த்தையிலும்
பகுத்தறிவு பெரிதோ, வேதங்கள்
எழுதிய பெரியார்கள் முட்டாள்களா?
அவர்களுக்கு இது தவறு என்று
அறியும் சக்தி கிடையாதா? அவர்
களைவிட இப்பொழுது பகுத்தறி
வுப்பிரசாரம் புரியும் சு. ம. காரர்
களும் அறிவியல்வாதிகளும் பெரிய
மேதாவிகளா? நமது முன்னோர்
கூறிய தன் உண்மையை இக்காலத்
துள்ளோர் அறியாது பிதற்றுகிறார்
என்று தாம் ஒப்புக்கொண்டிருந்த
பகுத்தறிவு ஜோதியை மதப்பைத்தி
யம் என்னும் இருட்படலம் மறை
த்துக்கொண்டு வருகிறது. உதாரண
மாக யான் ஒரு சமயம் புகை வண்டி
யில் போகும்போது பஞ்ச கௌவிய
மருந்தும் பைத்தியக்காரத்தனத்
தைப்பற்றி ஒரு பிராமணரல்லாத
சோதரன் ஓர் ஆங்கிலப்பட்டம் பெ
ற்ற ஓர் பிராமணரிடத்தில் தெளி
வாய் விவரித்தார், உடனே அப்பார்ப்
பனர் ஐயா நீங்கள் கூறுவது சரி
தான் கலியுகத்தில் அவ்வாறு பகுத்
தறிவைப்பின்பற்றி வேதங்களிற
கூறியதெல்லாம் தவறு என்று
கூறுவார்களென பகவான் கூறியிரு
ப்பதற்கொப்ப நீங்களெல்லாம் முளை
த்துவிட்டீர்கள். பகுத்தறிவால் காண
ப்படும் பொருளெல்லாம் அழியக்
கூடியதே. நாம் இந்தப்புறக்கண்
ணால் காணப்படும் பொருளெல்லாம்
பொய்யானதே. மெய்யான பொருள்
அந்தரிந்தியப்பிரம்மம் ஒன்றே. சிரு
ஷ்டி கர்த்தாவான நான் முகக்கட
வுள் புத்திரரும், சர்வஞ்ஞரும் சூரிய
குல குருவுமான வசிஷ்டமகாரிஷிக்
குப் பௌத்திரராகிய பராசரர் தம்
ஸ்மிருதியில் பிராயச்சித்த காண்டம்
எட்டாவது அத்தியாயம் 22 ஸ்லோ
கத்தில் கோமூத்திரம், கோமயம்,
பசுவின்பால், பசுவின் தயிர், பசுவின்
நெய், தர்ப்பஜலம் இவைகள் கூடி
யது பாபத்தைப்போக்குவதும் பரி
சுத்தமான பஞ்ச கௌவியமென்று
பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்
கிறது என்றும், ஷை அத்தியாயம்
35ம் அத்தியாயத்தில் ஹோமம் செ
ய்துவிட்டு எஞ்சியதைப் பிராமணன்
ரபிணவத்தைச்சொல்லிக்கையிட்டுக்
கலக்கி பிரணவத்தைச்சொல்லி சமி
த்தினால் கடைந்து பிரணவத்தைச்
சொல்லி எடுத்துப்பிரணவத்தைச்
சொல்லி பானஞ்செய்யவேண்டும்'
என்று கூறியிருக்கிறது, 36ல் 'மனி
தர்களுடைய சரீரத்தில் எலும்பு
தோல் இவைகளைப்பற்றியதாகிய
எல்லாப்பாபங்களையும் கிளர்ந்தெரி
கிற அக்கினியானது கட்டையைத்
தகிர்ப்பதுபோல் பிரம கூர்ச்சபஞ்ச
கவியமானது கொளுத்தும்' என்றும்
38, 39ல் தேவர்களால் வசிக்கப்
பட்டதாகிய பஞ்சகவியமானது
மூன்று லோகங்களிலும் பரிசுத்த
மானது கோமூத்திரத்தில் வருண
னும், கோமயத்தில் அக்கினியும்,
தயிரில் வாயுவும், பாலில் சந்திரனும்
நெய்யில் சூரியனும் வசிக்கிறார்கள்.
இன்னும் கடன்மடைதிறந்தார் போ
ன்று மடமடென சமஸ்கிருத ஸ்லோ
கங்களைச்சொல்லி அதற்குரிய இந்த
மொழி பெயர்ப்பைக்கூறி நம்பெரிய
வாள்கள் கூறியிருக்க நிறைவற்ற
இந்த அற்பப்பகுத்தறிவைக்கொண்டு
அவர்கள் கூறியது தவறு என்று
கூறல் எத்துணை அறியாமை என்று
கண்கள் சிவக்கக்கூறினார். எமது
சோதரரும் இன்னது கூறுவதென்று
அறியாது தவித்தார், நானும்
அப்பார்ப்பன நண்பரிடம்,
சாரதா மசோதாவின் நன்
மையை, எடுத்துக்கூறியும் பாலிய
விவாகத்தினால் இந்தியப் பெண்க
ளின் உடல் வலிமை குன்றி நடைப்
பிணங்களாய் வாழ்வதையும், இளமை
மணத்தால் பால்ய விதவைகள் மலி
வதையும், மறுமணமில்லாது விபசா
ரம் பெருகுவதையும், சிசுக்கொலை
கள் அதிகப்படுவதையும், விளக்கிப்
பண்டைக்கால ஆரிய முனிவர்கள்
கூட ருதுவான பெண்களை மணஞ்
செய்திருக்கிறார்கள் என்பதற்கு பண்
டைக்காலப் புராண இதிகாசங்களெல்
லாம் கூறுகிறதே, அவ்வாறிருக்க
வைதீகப்பார்ப்பார்களெல்லாம் சார
தா சட்டத்தை எதிர்த்து ருதுவாகு
முன்னர் மணஞ்செய்து கோர்ட்டு
களில் அபதாரங்கள் விதிக்கப்பட்டா
லும் செலுத்திவிட்டு மீண்டும் சாரதா
சட்டத்தை மீறித்திருமணம் நடத்து
கின்றனரே இது சரியா என்று
வினவினேன். உடனே அப்பார்ப்
பன நண்பர் என் பக்கம் திரும்பி
முன் யுகங்களில் ருதுவாகுமுன்னர்
மனுஸ்மிருதியை அனுசரித்து திரு
மணம் நடந்து வந்தது. பின்னர்
பாராசரர் மனுஸ்மிருதியைச் ரத்துச்
செய்து இக்கலியுகத்திலுள்ளோர்க்கு
பாராசர ஸ்மிருதியை ஏற்படுத்தியுள்
ளார். அந்த ஸ்மிருதியில், பிராயச்
சித்த காண்டம் நாலாவது அத்தியா
யத்தில்,

எட்டு வயதினையுடையவள்கௌரி,
ஒன்பது வயதினையுடையவள் ரோ
கினி, பத்து வயதினையுடையவள் கந்
நிகை, பத்து வயதிற்கு மேற்பட்ட
வயதினை யுடையவள் ரஜஸ்வலை என்
னப்படுவார்கள். கௌரி, ரோகினி,
கந்நிகை ஆகிய மூவரும் விவாகத்தி

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

# வாலிபர்களே! வாருங்கள் போருக்கு.

திருமதி. கே. ஏ. ஜானகி.

உலகில் எந்த நாடு பெண் மக்களை அடிமைபடுத்தி கொடுமைப்படுத்துகின்றதோ அந்த நாடு என்றும் அடிமை நாடாகவே கிடக்கும். எந்த நாட்டில் மாதர் சுதந்தரத்துடன் வாழுகின்றார்களோ, அந்த நாடு என்றும் சுதந்தர நாடாகவே ஜொலிக்கும். மக்களை ஈன்று உலகிற்களிக்கும் ஒரு சமூகமாகிய உலகமாதாக்களை கொஞ்சமேனும் ஈவு இரக்கமென்பதுமில்லாமல் வதைக்கும் நன்றிகெட்ட, மதிகெட்ட ஓர் நாட்டிற்கு எங்ஙனம் சுதந்தரம் சுயராஜ்ஜியம் கிட்டும். எங்கள் பாரதமாதா ஆங்கில அடிமை விலங்கில் அகப்பட்டனளா? எங்கள் சுதந்தர தேவியை ஆங்கில அரசாங்கம் அடிமைபடுத்திவிட்டது; எங்கள் பாரத தாய் அன்னியரால் அவஸ்தைப்படுகிறாள் என்று கூறும் காங்கிரஸ்காரர்களே! தேசியவீரர்களே! பாரதமாதாவென்ற உலகநாயாகிய பெண்ணுலகை அடிமைபடுத்தியவர் ஆங்கிலேயரா? அல்லது ஆணவம் படைத்த ஆணுலகா வென்பதை ஆராய்ந்து அறியாது ஆங்கிலேயர் மீது முட்டாள்தனமாய் முட்டிக்கொண்டு மண்டையுடைபட்டு மாண்டுமடிவதேனோ? எங்கள் பாரதமாதா அடிமைபட்டுவிட்டாளென்று நீலிக்கண்ணீர் வடிப்பது யாரையேய்ப்பதுவென்பதை அறிய ஆண்மையற்ற தேசிய வீரர்களென கூறும் ஆணின் கன்னத்தில் அறையொன்று கொடுத்து வினவினால் விளங்கும். எனவே, பாரதமாதாவென்று கூறும் உலகதாயாகிய பெண்ணுலகு மதவெறியர்களாலும், வைதீக பேய்களாலும் அடிமை விலங்கிடப்பட்டு அடக்கியாளும் வைதீககோட்டையை சுக்கல் சுக்கலாக தகர்த்தெறியவே வாலிபர்களை அழைக்கின்றோம். என்று மாதர் சுதந்திரம் பெறுகிறார்களோ அன்றே உங்கள் நாடும் சமூகமும் விடுதலையடையுமேயல்லாது, மாதர் உலகை அடிமைகொண்டு அன்னியரிடம் உங்கள் நாட்டை விடுவிப்பது ஊமையன் கண்ட கனவாகவே முடியும். வருங்கால வாலிபர்களே! நமது தமிழர் சமூக நிலமையை உற்று நோக்குங்கள் அடிமை வாழ்வின்று விலகுங்கள் பண்டைய தமிழுலகில் மக்களனைவர்களும் ஒருதாயின் புதல்வர்களைப்போல் ஒற்றிருந்தார்களெனவும், சாதி என்ற சொல்லே இல்லாமல் சகோதரநேசம் நாட்டில்ததும்பியதாகவும் சமத்துவம் சமரசம் புரண்டாடிய தமிழ் சமூகத்தில் இடைக்காலத்தில் எப்படியோ பார்ப்பன சாதி என்னும் நீசச்சனியன் குறுக்கிட்டு இன்று நாலாயிரம் சாதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதாக ஆராய்ச்சியாளர் நூற்களினால் நாம் அறிகின்றோம். அதிலிருந்து மக்களனைவரும் நாயும் பூனையும் போல் வாழதலைப்பட்டிருக்கின்றோம் என்பதையும், பாழும் மதம் மெய்யென்று மதபித்துப்பிடித்து திரியும் மதவெறியர்களும், வைதீகப் பேய்களும் தற்காலத்தில் நாட்டை பாழ்படுத்திவருகின்றார்கள். நம்சமூகத்தில் உயர்ந்த சாதியார்களென்பவர்களெல்லாம் ஒன்றுகூடி ஒருவகுப்பாரை தீண்டப்படாதவர்களென்றும் ஆண்மக்களென்றும் ஒன்றுகூடி பெண்மக்களை அறிவற்றவர்களென்று கூறி அவர்களை கேவலம் ஒரு நாயினும் கேடாக மதித்து கொஞ்சமேனும் இரக்கமில்லாது வன்நெஞ்சர்களாகிய மதியீனர் மக்களை வதைப்பதை எடுத்துக்கூறும் தலைவர்களெத்தனை, பத்திரிக்கைகளெத்தனை, கைசலிக்க எழுதும் கைகளெத்தனை தொண்டைவறளக்கதறும் தொண்டர்களெத்தனை? ஊணுறக்கமில்லாது இவைகளுக்காக அரும்பாடுபடும் வீரர்களெத்தனை? இவையெல்லாம் கொஞ்சமேனும் பொருள்படுத்தாது நம் தமிழ்சமூகம் உடன்பிறந்தசகோதரர்களை அடித்துத்தூற்றி அவமானப்படுத்தி பொதுவிடங்களில் போகவிடாமலும், மழைகாற்றுக்கு அண்டவிடாமலும் அருந்தும் நீரை அள்ளவிடாமலும், இவ்விதம் ஒருவரையொருவர் அல்லோலபடுத்தும் ஓர் நாட்டிற்கும் ஓர் சமூகத்துக்குமா சுதந்திரம் வேண்டும்? சுயராஜ்ஜியம் வேண்டும்? எனவே நாடும் தேசமும் சமூகமும் விடுதலையடைய வேண்டுமானால் முதலில் சீர்திருத்தப்போர் வேண்டும். பெண்சமூகம் விடுதலை வேண்டும். சாதிகட்டுப்பாட்டுகளை தகிர்க்கவேண்டும். கணக்கில்லா கலப்பு மணங்கள்வேண்டும். இவைகளுக்கு ஆதாரமாயுள்ள சமயசாஸ்திரங்களை போக்கவேண்டும். இவையாவும் அடியோடு தொலைக்க சமூக சீர்திருத்த சங்கங்கள் வேண்டும். சங்கங்களை தாங்கி நடத்த வாலிப வீரர்கள் வேண்டும். ஆனால் நம் தமிழ் சமூக வாலிபர்களின் நிலமைகளை உற்று நோக்கினாலோ வீரமற்ற கோழைகளாயும், சந்திலும் பொந்திலும் அடுப்பாங்கரையிலும் வாய்வீச்சு வீரர்களாயும் குறைசொல்லுவதில் சூரர்களாயும் குற்றம் கண்டு பிடிப்பதில் தீரர்களாயும், கூடுமானால் கூட்டத்தில் கோவிந்தாபோட கெட்டிக்காரர்களாகவும் துலங்குகின்றார்கள். இன்னொருவரை காட்டிக்கொடுத்து தான் தப்பித்துக்கொள்ளும் வாலிபர்களாலும் காசுபித்தில் கண்ணும் கருத்துமாயுள்ள எவ்வண்ணர்களாலும் எங்கனம் நாடும் சமூகமும் விடுதலையடையகூடும்? ஆகவே தமிழ் சமூக வாலிபர்களே! உங்களைப்போலுள்ள மற்றநாட்டு வாலிபர்களின் நிலமைகளை உற்று நோக்குங்கள். உங்கள் கோழைத்தனத்தையும் அடிமைத்தனத்தையும் அகற்றி வீறுகொண்டெழுங்கள். வெற்றிக்கொடியை பிடியுங்கள். வருங்கால உலகின் மக்கள் வாழ்க்கைச்சுமை எவனுடைய தலையிலிருக்கின்றனவென்பதை உற்று நோக்கினீர்களா? எதிர்கால வாழ்க்கைப்பொருப்பை ஏற்று நடத்துபவர்யார்? வாலிபருகிய நீங்களே ஒவ்வொரு தேச சரித்திரத்தையும் அந்தந்ததேசத்தின் நவீன சீர்திருத்த உன்னத போக்குக்கும், உரிமைபோரின் உன்னத எழுச்சி, சமூக சீர்திருத்தம் இன்னும் இவை போன்ற பல புதுபுது அமைப்புகள் அமைக்கப்பட்டு அந்தந்த நாடுகளும் எவ்வித உயரிய நிலமை அடைந்திருப்பதிற்குக் காரணம் யாது என்று உற்று நோக்கி ஆராய்ந்தால் அந்தந்த தேசத்தின் வாலிபர்களேவென்பதை ஒவ்வொரு தேச சரித்திரங்களும் விடையளிக்கும். ஒரு சாதாரண ஒரு ஏழைக்குடும்பத்தில்பிறந்து வளர்ந்து தனது சுய அறிவைக்கொண்டும் சொந்த முயற்சியைக்கொண்டு ஒரு போர் வீரனாகி மேல் நாட்டையே நடுநடுங்க செய்வித்து, பிரான்சு தேசத்தில் ஓர் வல்லரசனாய் துலங்கியும் உலக சரித்திரத்தில் பெயர்போன போர் வீரனாய் பிரகாசித்த நெப்போலியன் யார்? ஓர் வாலிபனே! உலக முழுவதையும் ஜெயித்துவெற்றிக்கொடி நாட்டிய அலெக்சாண்டரும் அவரது சேனாதிபதியும் வீரர்களும் யார்? அவர்கள் வாலிபர்களே! ஒரு தேசமோ நாடோ ஒரு சமூகமோ முன்னேற்றம் அடையவேண்டுமானால் அவை அன்னாட்டு வாலிபர் கையிலிருக்கின்றன. பிறநாடுகளில் வாலிபர்களால் செய்யப்பட்டவைகளும் செய்யப்படுகிற அபாரசக்திகளைக்கவனிப்போமானால் நம்நாட்டு வாலிபர்கள் வெட்கி தலைகுனியவேண்டும். அயர்லாந்து, ஜெர்மனி, எகிப்து, துருக்கி, ஜப்பான், ருஷிய முதலிய நாடுகள் முன்னிருந்த நிலைமைக்கும் இப்போது இருக்கும் உன்னத நிலமைக்கும் காரணபூதர் யாரென்றால் அத்தேசத்து வாலிபர்களுடைய குன்றா முயற்சியாலும், குலையா ஊக்கத்தினாலும் என்பதையாரும் மறுக்கார். எகிப்துதேசம்விடுதலைக்கு காரணம் அந்நாட்டு இளைஞர்களின் பெரும் முயற்சியே! அடிமைபடுகுழியில் புதைக்கப்பட்டுகிடந்த ஜப்பான் நாடு இப்பொழுது உலக வல்லரசுகூட போட்டிபோட முன்வந்திருப்பதற்கு காரணம் யார்? அந்நாட்டு இளைஞர்கள் ஒரே இரவில் ஒன்றுகூடி கோவில்களை எல்லாம் தகர்த்தெறிந்து மூட கட்டுப்பாட்டையும் சாதிக் கட்டுபாடுகளையும் குழிதோண்டி புதைத்து, கலப்பு மணங்களை அதிதீவிரமாய் கைகொண்டு செய்வித்து நாட்டைவிட்டு அயல் நாடு சென்று பல விஞ்ஞான கலைகளை கற்றுதன் நாட்டை வல்லரசுகளில் ஒன்றாய் துலங்கசெய்வித்தது யாரால்? வாலிபரால்லன்றோ? மூடத்தனத்தில் முதலணியில் நின்ற ருஷியா இன்று அறிவுச்சுடர் கொண்டு இதுகாலை உலகமே திடுக்கிட செய்யும் ருஷியா அதி விரைவாக முன்னேறிகொண்டுபோவது யாரால்? இளைஞரால். ஜர்மனியிலுள்ள பழைய கொடுமை ஆட்சிமுறைகளையும், பழயபழக்கவழக்கமென்னும் பாழும்பேயினை விறட்டியடித்து சமூககொடுமைகளை வெட்டி வீழ்த்தி வெற்றிமாலை சூட்டினவர்கள் யார்? வாலிபர்களே. முஸ்தப்பா கமால்பாட்சா அவர்களைதலைமையாய் கொண்டு, தந்தேசத்தை சீர்திருத்தம் செய்வித்து அந்தேச பெண்களை மூடகட்டுப்பாட்டினின்று விடுவித்து, வீரப்பெண்மணிகளாக துலங்க செய்வித்து, இன்று, டருக்கி தேசம் சீர்திருத்த நாடுகளில் முதன்மைபெற்றிருப்பது யாரால் வாலிபரால். அயல் நாடுகளில் பலவிபோதிலுங்கூட இளைஞர்களின் ஊக்கத்தையும் எழுச்சியையும் பின்பற்றி வாலிபர் உணர்ச்சிபெற்றிருக்கின்றார்கள். அரசன் கட்டுபாட்டினின்று இன்று விடுபட்டு சுதந்தர நாடாக ஜொலிக்கும் சியாம் நாட்டை விடுவிக்க யாரேனும் ஒருவர் உயிர் துறந்தனரா? யாரேனும் ஒருவர் மண்டையுடைபட்டு ஆஸ்பத்திரியில் அவஸ்தைப்பட்டனரா? ஒருவரேனும் ஒருசொட்டு இரத்தம் சிந்தினர்களா? ஒரேநாளில் உடனே அரசனை அழைத்து எங்களுக்கு சுதந்தரநாடாக வேண்டுமென கூறினர்! அரசன் ஒரு வார்த்தைபேசாது நாட்டை குடிமக்களிடம் ஒப்புவிக்கப்பட்டதை யாரால் சியாம் நாட்டுவாலிபரால். என்பதை உற்றுநோக்கினீர்களா? தமிழ் வாலிபர்களே! வீரமற்ற கோழைகளாகவும் சுத்தபேடிகளாக இன்னொருவரால் மதிக்கப்பட்டு கண்மூடிகளாய் இருப்பதை நோக்க உங்களுக்கு வெட்கமில்லையா? ஸ்ரீமதி மேரியா உங்களின் யோக்கிதையை பலஉலகமறிய பறைசாற்றினார்களே? இவையறிந்த பின்னாலும் நீங்கள் வெட்கமடைந்து உங்கள் சமூகத்தை சீர்திருத்திகொள்ள கூடாது? பட்டம் பதவிகளுக்கு ஆசைபட்டும் பொறுமைபட்டு போட்டிபோடுவதுதானா உங்கள் வீரம்? உங்கள் கண்முன்பாக பிரகாசித்து, ஜொலித்து கொண்டிருக்கும் இதரநாடுகளின் முற்போக்கைப்பத்திரிகையில் உங்களிருகண்ணால் பார்த்தீர்களா! "எவர் கெட்டுகெட்டால் நமக்கென்ன" வென இருக்கும் சுயநலபணவெறி சோம்பேரிகள் எந்நாள் போதும், திண்ணைதூங்கி சோம்பேரி ஞானம்பேசும் வீரர்களின் வாழ்நாளாய் ஆட்சிகொள்ளாதீர்கள். மற்ற ஒவ்வொரு நாடும் உலகமுன்னேற்ற பந்தயத்தில் போட்டிபோட்டுவெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றன. நாமும் நமது சமூகமும் இன்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க).

# பட்டுக்கோட்டை சுயமரியாதை மகாநாடு.

## வரவேற்பும், நிகழ்ச்சியும்.

செப்டம்பர் மீ 16-தேதி காலை 9—5 க்கு வந்த ரயிலில் சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர்கள் எஸ். குருசாமி—குஞ்சிதம் அவர்கள் வந்திறங்கினார்கள். ரயில் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னாடியே புகைவண்டி நிலையத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். தலைவர் அவர்கள் இரங்கியவுடன் ஜே கோஷத்தினிடையில் மலர்மாலை சூட்டப்பெற்று இரட்டைக்குதிரை பூட்டிய பீட்டனில் ஸ்டேஷனிலிருந்து ரயில்வே ஸ்டேஷன்ரோடு, பழனியப்பன் தெரு சின்னக்கடைத் தெரு, அக்கிரகாரம், பிள்ளையார் கோவில்தெரு பெரிய கடைத்தெரு தேரடித் தெரு வழியாக இவ்வூரில் சுயமரியாதை இயக்கத்திற்கே வழிகாட்டியவரும், இவ்வூர் தலைவருமான காலம்சென்ற தலைவர் வேணுகோபால் அவர்களின் ஞாபகமாக அமைக்கப்பட்ட வேணுகோபால் ஹால் என்னும் மகாநாட்டுப் பந்தலுக்கு ஆடம்பரத்தோடு அழைத்துவரப்பட்டது. மகாநாட்டுப் பந்தல் வாழைமரங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பந்தலில் பல தூண்களிலும் பல வாக்கியங்கள் அடங்கிய துண்டு அட்டைகள் பந்தல் முழுவதும் கட்டி இருந்தது, பார்ப்பவர் மனதைக் கவர்ச்சி உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை. மகாநாட்டுத் திறப்பாளர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் தமது திறப்பு விழா பிரசங்கத்தைத் தமிழில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சகோதர சகோதரிகளே!

என்னை மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். எனது பிறப்பிடமாகிய தஞ்சை ஜில்லாவிலே இதற்கு முன் நடந்த சுயமரியாதை மாகாண தொண்டர் மகாநாட்டிற்கும் தலைமை வகிக்கும் பாக்யம் கிடைத்தது. இம் மகாநாட்டைத் திறந்துவைக்கும் சமயமும் கிடைத்தது. சுயமரியாதை இயக்க சம்பந்தப்பட்டவரையில் என் வாழ்நாள் முழுவதும் இந்த இயக்கத்திற்கே வேலை செய்யக் காத்துக்கொண்டு இருக்கிறேன். வரவேற்புக் கழகத்தாருக்கும், இவ்வூர் நகரவாசிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். இந்த நமது சுயமரியாதை இயக்கமானது படிப்பு, ஆராய்ச்சி அரசியல், ஞானமற்றவர்கள் குறைகூறுவதும் கொள்கைகள் நிமித்தம் விரோதிப்பதும் நாகரீகமான முறையன்று. இந்த சுயமரியாதை இயக்கத்தில் மற்ற இயக்கங்களைக்காட்டிலும் உண்மை அறிவும் படிப்புமுடையவர்கள் அதிகமாக இறங்கி இருக்கிறார்களென உரைத்தல் மிகையாகாது. உதாரணமாகச்சென்ற மாதத்தில் துறையூரில் நடந்த தமிழர் மகாநாட்டின் நடவடிக்கைகளைப் படித்துப் பார்த்தால் தமிழர் மகாநாட்டின் மகிமை இன்னதென்றென விளங்கும். தமிழர் மகாநாடு எல்லா மதத்தினரும் ஒருமைப்பட்டு நடத்தல் அவசியமாகும். இருப்பினும் அம்மகாநாடு ஆதி திராவிடர்களை விலக்கியவாற்றால் வெறும் சைவர் மகாநாடாகவே விளங்கியது. அங்கே பல அறிவாளர்கள் "கோவில்களைக் கல்விவளரும் கழகங்களாக மாற்றுதல் எப்படி" என்னும்கேள்வியைப்பற்றி உரையாடினர். அவர்கள் கோவில் என்பதின் பொருளையும், அதைப்பற்றிய நன்மை தீமைகளையும் நன்செடுத்து விளக்கியிருக்கிறார். கோவில்களைக் கல்விக் கழகங்களாகவும், ஆஸ்பத்திரிகளாகவும் மாற்றுங்கள் கோவில் பணங்களை வீணே கற்களுக்கு அபிஷேகங்கள் செய்வதில் செலவழித்தல் வேண்டாம்.

இந்தக் காலங்களில் பணச்செருக்கினால் பயனில்லை. இயக்கத்தின் வேகத்தை இனி எதிர்த்தல் இயலாது. ஈ. வெ. இராமசாமிக்கு முதன் முதலில் மதராசில் பெரிய எதிர்ப்பு இருந்தது. ஆயினும் இப்பொழுது மதராஸ் ஜனங்களை இந்த இயக்கத்தில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நான் எனக்கு உண்மை என்று தோன்றிய சில வார்த்தைகளை உங்கள் முன் நின்று சொல்ல எனக்குச் சமயமளித்ததற்கு வந்தனம். உங்கள் எல்லோரையும் தனித்தனியே நின்று யோசனை செய்து இவ்வரிய இயக்கத்திற்கு ஒன்றுபடுமாறு வேண்டிக்கொண்டு நான் இந்த மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

### சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் கே. வி. அழகர்சாமி பேருரை.

நான் இளைஞர்களை இயக்கத்தில் ஈடுபடுத்தும் கருத்துடையோன். ஆஸ்திகத்தை நான் முழுமனதுடன் எதிர்க்கிறேன். சுயமரியாதை இயக்கத்தை பூர்ணமாகத் தழுவுகிறேன். இவ்வியக்கம் எல்லாமனிதர்களும் சமம் என்றும் கொள்கையைக்கொண்டு ஜனங்களுக்குப் பொருளாதார சமூக விஷயங்களில் சமத்துவம் எவ்வாற்றாலும் எய்தல் வேண்டும் என்னும் கருத்தை உறுதியாய்க் கொண்டது,

பலர் நம்மை பணக்காரர்களை நாம் எதிர்த்தல் பயனற்றதாகுமென்பதே. இது கோழைத்தனமாகும். சத்தியத்திறகே போராடுவோம். சத்தியமே ஜேயிக்கும். வீரர்களாகிய இளைஞர்களுடைய ஊக்கத்தை மாற்ற எந்த பலத்தாலும் எந்தக் காலத்திலும் எதிர்க்கமுடியாது. இந்த இயக்கத்தைச் சிலரே துவக்கினர். ஆனால் இப்பொழுது இவ்வியக்கத்தில் பல பெரியோர்களும், அளவற்ற ஜனங்களும் சேர்ந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தை இனி அசைத்தல் இயலாது.

பெரிய பணக்காரர்களைத் தழுவி சோற்றாலடித்த பிண்டங்கள் பலர் இருக்கின்றனர். அப்பதர்கள் அப் பணக்காரர்கள் ஜனங்களுடைய பொது நன்மையை புறக்கணிக்க உதவிசெய்து வருகின்றனர். ஆயினும் அவர்களால் என்ன செய்யமுடியும்? ருஷியதேசத்து அரசனைப்பற்றியும், அவனது அவகேடான முடிவைப்பற்றியும் அறிந்திருப்பீர்கள். நம் தேசத்து இளைஞர்களும் மற்ற தேசத்தார்களைக்காட்டிலும் ஆண்மையில், மாண்மையில் குறைந்தவர்களல்ல, சத்தியத்தின்பொருட்டு ஜெயமடையும் உறுதியுள்ள வீரர்களாய். நாம் சென்றுகொண்டிருக்கிறோம், எவ்விடையூறு எதிர்படினும் அஞ்ச மாட்டோம். இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் அனைவரையும் வரவேற்புக் கழகத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

அன்று மாலை 3-மணிக்கு மகாநாடு ஆரம்பமாகியது.

மகாநாட்டுத் தலைவராகத் தோழர் குஞ்சிதம் அவர்களை டி. வி. டேவிஸ் அவர்கள் தலைமை வகிக்குமாறு பிரரேபணை செய்தார்.

தோழர் பி. எஸ். தண்டபாணி அவர்கள் பிரேரேபணையை ஆதரித்துப்பேசினர்.

தோழர் குஞ்சிதம் அவர்கள் பெருத்தகரகோஷத்தினிடையே மகாநாட்டுத் தலைவர் ஸ்தானத்தில் அமர்ந்து நமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தினர். சகோதர சகோதரிகளே!

இன்று இவ்வூருக்கு வந்தவுடன் திடீரென என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டார்கள். நானும் உடன்பட்டேன். என்னைப் பலர் பலவாறாக அதிகம் புகழ்ந்தனர். அவை அவ்வளவும் உண்மையல்ல.

நமது இயக்கம் சைவசமயத்திற்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்டது. கிருஸ்தவர்களும், மகம்மதியர்களும் ஆதியில்நம்முடன் ஒத்துழைத்தனர். பின்னர் கிருஸ்துவ மதமும் இஸ்லாமும் தாக்கப்பட அன்னவர்கள் நம்மை எதிர்க்க முற்பட்டனர். ஆகவே சகலமத வைதிகர்களும் இன்று நம்மை எதிர்க்கிறார்கள்.

இப்படி எதிர்ப்பது இயற்கைதான். 16-ம் நூற்றாண்டில் லூதர் தைரியமாக எதிர்த்து அனேகக் கஷ்டப்பட்டார் [Gablis] உலகம் உருண்டையாய் இருக்கிறது. என்று சொன்ன பொழுது அவர் எல்லாக் கிறிஸ்தவர்களாலும் தாக்கப்பட்டார். [Socrates] அப்படியே கஷ்டப்பட்டார். ஆகையால் எல்லாமுற்போக்கான இயக்கங்களும் துவக்கத்தில் கஷ்டம்அடையும் [Shelly] ஷெல்லி என்பவர் நாஸ்திகத்தின் அவசியம் என்பதை யெழுதியபொழுது மிகவும்தாக்கப்பட்டார். ஆனால் இன்று ஒரு மகா கவியாகப்போற்றப் படுகிறார். ஆகையினால் நாம் அச்சமின்றி ஞாயத்திற்கு போராடவேண்டும். பணமமதையுடையவர்களின் எதிர்பிற்குச்சிறிதும் அஞ்சாது நாம் எடுத்த காரியத்தை முடித்தலே நம்கடன். எதிரிகள் நமக்கு விளைவிக்கஎண்ணும்தீங்குகள்நம்மை ஊக்குவிக்குமேயன்றி நம் இயக்கத்தை நசுக்கிவிட முடியவே முடியாது. அமெரிக்கன் பிரீதிங்கர்ஸ் அசோசியேஷன், ரேஷனலிஸ்ட் (Rationalists) in English Sell Respect movement in South India, the journal reason in Bombay all are doing good workin spite of opposition gaining ground every day நம்மை எதிர்ப்பவர்கள் நம் கொள்கையில் தங்களை அறியாமலே ஈடுபடுகிறார்கள். என்னிலும் நன்றாய் பேசுகின்றவர்களுக்கு இப்பொழுது இடம்கொடுத்து நான் பேசவேண்டிய மற்ற வார்த்தைகளை இறுதியில் பேசுவேன் என்று நமது முகவுரைப் பிரசங்கத்தை முடித்துக்கொண்ட பின்னர் தோழர்களான மீராசாயபு, சி. என். விஸ்வநாதம், சாமுவேல், பழனிசாமி முதலியோர் புரோகிதர்களின் புரட்டு, மூடப் பழக்க வழக்கங்களின் கொடுமை எதிர்ப்புகளுக்குஅஞ்சாமை மதப்புரட்டு, சுயமரியாதை இயக்க உண்மைத் தத்துவங்கள் முதலியவற்றைப்பற்றி உதாரணங்களோடு விளக்கி தேச விடுதலைக்கு முன் சமூக விடுதலை அவசியம் என்பதை வற்புறுத்தியும் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் தோழர் குருசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது

பட்டுக்கோட்டை சுயமரியாதைக் கோட்டை என்று நான் காலையிற் சொன்னேன். அது மிகையாகுமோ என்றுபின் அஞ்சினேன். ஆனால் பேச முன்வரும் இளைஞர்கள் யாவரும் கடவுள் தலையிலேயே கைவைப்பதால் இது ஒரு கோட்டைதான். சென்னை தலைநகராயினும் முட்டாள்தனத்திற்கே இருப்பிடமான ஓர் ஊர் அங்கு இவ்வளவு முற்போக்கான வாலிபர் அனேகர் இரார்.

சிலர் கடவுள் தலையில் கைவைப்பது முற்போக்கா என்று எண்ணக்கூடும்—நம்மைக் கண்டிக்க முற்படவும் கூடும். ஆனால் அறிவுடைய ஒரு இளைஞன் இவ்வூர் அம்பிகையான நாடியம்மனைவிற்று ஓர் ஆதி திராவிடப் பள்ளிக்கூடம் கட்டுவதே மேல் என்பார்கள்.

நம் அன்னைகள் குழந்தைகளின் குணங்களுக்கேற்ப பாலூட்டுவது போல் அவரவர்கள் எண்ணங்களுக்குத் தகுந்தாப்போல் பேசுவார்கள். ஆகையால் முற்போக்கானவர்களே கண்டிக்காதீர்கள். சுயமரியாதைஇயக்கத்தின்பலன்மகாநாடுகளிலும் பேச்சிலும் மட்டும் நின்றுவிடக்கூடாது. செய்கையில் வரவேண்டும், விசேஷமாய் மேல் ஜாதியார் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுபவர் பல விஷயங்களில் விட்டுக்கொடுக்கவேண்டும். முற்போக்கான சென்னையில் பூசனிக்காய்களும், திட்டி சுத்துவது இன்னும் வழக்கத்தில் இருந்துவருமானால் ஜாதிவித்தியாசத்தை எப்படி ஒழிப்பார்.

கடவுள் எங்கே இருக்கிறார்? மதம் என்பது மனித சமூகத்திற்கு நன்மை விளைக்குமென்று சொல்லுகிறீர்களே அது எங்ஙனம். ஐந்தாம் ஜார்ஜாகிய நம் அரசரை எத்தனை பேருக்குத் தெரியும். நீங்கள் அவர் படத்தை வைத்துப் பூஜைபண்ணவில்லையென்று யாராவது தண்டிக்கப்படுகிறார்களா? அப்படியிருக்க தன்னைப் பூஜைசெய்யவில்லை யென்றுகோபம்கொண்டு நம்மை சாபத்துக்குள்ளாக்கும் சக்தி தெய்வம் என்கிறீர்களே. இது அறிவுக்குப் பொருந்துமா? எல்லாவற்றையும் ஆக்கிக்காத்து அருள் சுரக்கும் தெய்வம் பாட்டிலேயும், பூஜையிலேயும் மயங்கி மகிழ்ந்து ஈடுபடுவதும், இல்லையேல் கோபம் கொள்ளுவது பொருந்துமா?

தெய்வம் கோவில் வந்தனை வழிபாடு என்று சொல்லி ஜனங்களை வஞ்சித்து ஊர்க்காசைப் பிடுங்கி உயிர்வாழும் பணக்காரனும், வேசித்தனம் செய்பவனுங்கூட பெரிய ஆஸ்திகனாய்க் கருதப்படுவது நம் தேசத்திற்கே வெட்கம். கற்களுக்குப் பொற்குவியல்களை வாரியிறைத்து அவைகளுக்கு நகை போட்டு மகிழ்வதுதான் அறிவோ. எங்கள் கண்டனங்களைத் தீர யோசியுங்கள். நாடியம்மன் பக்தர்கள் எங்களை அநியாயமாய்க் கோபிக்கவேண்டாம். நாம் புராண ஆபாசங்களைக் கண்டித்தால் கடவுளைத் திட்டினால் எங்களைக் கடவுள் கேட்கட்டுமே. இதையே கலியுகத்தில் எங்கள்போன்ற கூட்டம் வருமென்று சொல்லியிருக்க நீங்கள் என் கஷ்டப்படுகிறீர்கள்.

ஏழை மக்களின் பணங்களில் வேசிகளுக்கும், வாணங்களுக்கும், வாகனங்களுக்கும் என் . செலவிடுகிறீர்கள். எந்தப் பார்ப்பான் ஒரு கோவில் கட்டியிருக்கிறான். அவன் முன்னேறவில்லையா. உன்னை மாத்திரம் புகழ்ந்துபேசி சிண்டுதட்டிவிட்டு உயிர்வாழ்கிறானே. அவனுக்கு ஏதாவது கேடுவருகிறதா தற்பெருமைகாலங் கழிப்பதா? பக்திபார்ப்பான் கலியாணங்களுக்கும் சங்கராச்சாரிக்கு பூணூல் கலியாணங்களுக்கும் கொடுப்பதா தர்மம். நம்பிள்ளைகள் இல்லையென்று இறந்தால் ஒருபைசா ஈவானா பார்ப்பான். சேஷப்படும் என்று சொல்லமாட்டானா. நமது மக்கள் நாள் முழுதும் ரிக்ஷா இழுத்தாலும் வெட்டுவெட்டினாலும், வெயிலிலும், மழையிலும் அடிபட்டாலும் அவர்களுக்குக்கிடைப்பது 1 அணா. 'இரண்டுபேர் நாலணா' என்னும்காப்பிக்கடைபார்ப்பனவாலிபரும், பஞ்சாங்கப் பார்ப்பனரும் எவ்வளவு சுலபமாய்ப் பணம் சம்பாதித்துத்தின்று கொழுக்கிறார்கள்.

ஆகையால் விழித்தெழுங்கள் காயத்திரி ஜெபம் உங்களை ஆகாயத்தில் பறக்கச்செய்யாது, அறிவே தெய்வம் என்று முயலும் மேனாட்டாரே மேலே பறக்கின்றனர். பார்ப்பனர்களுக்கும், கோயில்களுக்கும் கொடுத்த நம் அரசர்களெங்கே. ஆஸ்திக தஞ்சை மன்னர்கள் இங்கு எங்கேயிருக்கிறார்கள். உங்கள் கொள்கை நல்லது என்று ஒப்புக்கொள்ளும் உங்களில் அநேகர் எங்கள் பேச்சுக்கேட்டு கைதட்டி மகிழும் நீங்கள் செய்கையில் ஈடுபடாதிருப்பது வெட்கமில்லையா? இதற்குக்காரணம் மதமல்லவா? எல்லாங்கொடுத்து பார்ப்பான் காலிலும் விழுகிறோமே மானமில்லையா?

கன்னிகாதானமென்றால் என்ன? உனக்கு வெட்கமில்லையா? நாம் கூட்டிக்கொடுப்பதா மனுதர்ம சாஸ்திரமா? நம் நாட்டுச்சட்டங்களுக்கு ஆதாரம்—பணத்தைக்கொடுத்துக் கேவலம் மாட்டுமலத்தைப் பஞ்சகவியமாகக் கொள்கிறோம்- நம்பெண்சாமிகளுக்குப்பார்ப்பார ஆண்சாமிகள் உடைஉடுத்துவதும், அந்தமான மற்ற சாமியை நாம் தூக்கி ஆடிக்கொண்டு நாளைக் கழிப்பதா. அறிவுடமை? என்று முழு சொற்பொழிவையும் மிகுந்த ஆத்திரத்தோடும், உணர்ச்சியோடும் பேசி முடித்தார்.

## தோழர் முத்துசாமிவல்லத்தரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது.

நமதியக்கம் சாத்வீகம் சொற்பொழிவு இவைகளிலே காலங்கழிக்கிறதில்லை. யாவும் செய்கையிலேயே நடக்கின்றது. சத்திக்கத்திமேடைகளில் ஆரவாரம் செய்வது நமது ஊக்கத்தைக் கெடுக்கும். ஆகையால் அன்பர்களே சிறியவர்கள்ஞாயமான உணர்ச்சியைத்தடைசெய்யாதீர்கள். சுயமரியாதைக்கோட்டையென்றபட்டுக்கோட்டையில்3 சுயமரியாதை மணந்தானா நடப்பது. உங்கள் பிள்ளைகளின் சீர்திருத்த உணர்ச்சியை ஏன் கெடுக்கிறீர்கள். இவ்வளவு உணர்ச்சியுடைய ஊரில் இன்னும் அநேக மணங்கள் நடக்கவேண்டும்

நம் இளைஞன் ஒருவன் சுயமரியாதைத்திருமணஞ்செய்ததினால்அன்னர்க்குப் பெண்கொடுத்தவர்கள் வீட்டை நாகைப்பட்டினத்தில்தள்ளி வைத்திருக்கிறார்களாம். என்னே முற்போக்கான இந்தக்காலத்தில் இவ்விதமான நடத்தை,நம்தேசம் உருப்படுமா?

நம்நாடு எவ்வளவு பிற்போக்காய் இருக்கிறது. கல்வியில்லாமையே அதற்குக்காரணம். ஆடவர்களை கண்டால் ஓடி ஒழிப்பது நம் பெண்களின் கடமையாம். எல்லாச்சீர்திருத்தங்களுக்கும் நம்பெண்களே முட்டுக்கட்டைகள். எல்லோரும் ஒன்று தலைமை வகிக்கும் திருமதி குஞ்சிதம் போல் ஏன் கல்விகற்கக்கூடாது கற்றால் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு எவ்விதத்தடையும் இராது. மதமும் நம் ஜனசமூகச்சட்டங்களும் மிக்க கேவலமானது. பெண்களை அடிமைப்படுத்துகிறது நம் நாட்டுப் பார்ப்பனரும் நீதி நூல்கள் என்று கொள்ளும் அவர்களாலாய நீதி நூல்களுமே காரணம். முற்காலத்தில் நம் திராவிட நாடு எக்காட்டையும் விடச்சிறந்தது, வீரத்தனமாய் யாரும் காந்தருவ மணங்களும் மாகாணசுதந்தரமும் மலிந்துகிடந்தவொரு நாடு. இன்றோ நம் நாடு மூடப்பழக்க வழக்கங்களில் இழுபட்டு பெண்களை வருத்தி அவர்கள் ஆண்பிள்ளைகள் பெறுவிட்டாலும் அது அவர்கள் குற்றமென்று கூறி நீக்கிப்பது பொருந்துமா. சதிகார ஆரியர்கள் ஒருபெண்ணுக்கு 5 புருடர்களைக் கட்டியும் பலபெண்களைக்கட்டிக்கொள்ளலாம் என்றும் சொல்லி நம்நாட்டை இழிவு படுத்திவிட்டார்கள். சகோதரன் சகோதரிகளையும், மாமன் மருமகளையும் கட்டிக்கொள்வதற்கும் இன்னும்கேவலமாய் நடப்பதற்கு நம் மதம் இடங்கொடுக்கிறது.

நம்மை பிரித்தாளும் சூட்சியை ஆரியர்கள் கைக்கொண்டு வருகிறார்கள். கோத்திரம் பார்ப்பதும், குலம் பார்ப்பதுமே சாத்திரத்துக்கொத்த மணமென்று பார்ப்பனப்போதிக்கிறார்கள். பெண்களுக்குக் கிறிஸ்துவ, மகமதிய மதங்கள்போல் உரிமைகளே கொடுப்பதில்லை. இன்னும் எல்லா மதங்களும் நம் திராவிட நாட்டுக் கல்லாமக்களும் பாலிய மணத்திற்கு விரோதமாயிருக்க நம் மதம் பாலிய விவாகத்தைப்போதிக்கிறது. நம் விருப்பத்திற்கேற்ப புரோகிதர்களுக்கு லஞ்சம் கொடுத்துப்பெண்களை மணக்கின்றோம்.

நம் ஊர்களில்மணியகாரன், கணக்கப்பிள்ளை குருக்கள் இவர் ஊருக்கு ஊர் இருந்துகொண்டு பார்ப்பனீயத்தை வளர்த்துக்கொண்டு நம் நாட்டு மக்களை இழிவு படுத்தித்தண்ணீர்த்துறைகளையும் மற்ற பொதுச்சொத்துக்களையும் தங்களுக்கே உரித்தாக்குகின்றனர்.

நம்பெண்மக்களைச் சூத்திரச்சியென்றும், நம் மக்களைத் தீண்டப்படாதவர் என்றும் சொல்லுகிற பார்ப்பனமொட்டைகளாகிய கட்டைகளை கண்முன் வரவிடாது அகற்றவேண்டும். நம் பண்டை வழக்கங்களைக் காப்பாற்றவும் கொடிய பார்ப்பனீயத்தை அகற்றவும் நம் பெண்மக்கள் முன்வரவேண்டும். இங்கு ஸ்திரீகள் அநேகர் வந்திருப்பது போற்றத்தக்கது. நீங்கள் கேட்டவைகளைக் கையாளுவீர்கள் என்று எண்ணுகிறேன்.

## தோழர் அழகர்சாமி.

அநேகர் என்னைக்கொடியவன் என்று எண்ணுகிறதினால் நான் என்ன சொல்லப்போகிறேன் என்று கேட்க அவாவுகின்றனர். நான் ஏழை பணக்காரர் என்பதுபற்றி இன்று பேசுவேன் என்று அநேகர் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அது நாளைக்கு ஒட்டர்கள் மகாநாட்டில் பேசப்படவேண்டுமேயன்றி இன்று சுயமரியாதை மகாநாட்டில் பேசப் போவதில்லை.

சிலர் சு. ம. காரனை எள்ளுகின்றனர். இன்று என்னைப்பாராமல் இருவர் நம்மைப்பற்றி உரையாடினர். இவர்கள் எல்லாந்தெரிந்தவர்கள் போல் பேசுகிறார் என்றார் ஒருவர். சொல்வது ஞாயந்தான் என்றார் மற்றொருவர். ஆனால் வாடாபோகலாம் என்று முன்னவர் பின்னவரையும் கூட்டத்துக்கு வராமல் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

சகோதரர்களே நீங்கள்உங்கள்சொந்தஅறிவை உபயோகியுங்கள். மூலாம் பூசியமரம் லட்டுமாதிரி இருக்கிறதென்று அதை லட்டு என்பாயோ. உன் பார்வை நுகரும் சக்தி முதலிய 5 சக்திகளாலும் அறிந்தாலொழிய நீ எப்படி ஒப்புக்கொள்ளுவாய்.

நீ அறியாததொன்றை அம்மையே அப்பா என்றும் அகண்டபரிபூரணச் சச்சிதானந்தம் என்று அறிவுக்கெட்டாதது என்றும், புடலங்காய் என்றும் கூறுவது அறிவிற்குப்பொருந்துமா? நீ நம்பு, உன் நம்பிக்கைக்கு வணக்கம் செலுத்துகிறேன் உன் நம்பிக்கைக்கு ஆதாரம் என்ன அறிவிற்கும், பஞ்சேந்திரிய உணர்ச்சிகளுக்கும் எட்டாத ஒன்றை நீ எப்படி உண்டென்று நிரூபிக்கிறாய். மனிதன் உண்டாவதற்கு தாய்தகப்பனே காரணமன்றி கடவுளல்ல பெண்ணும் ஆணும் பிரிந்திருப்பின் சந்ததி கிடையாது. டார்வின் (Darwin) சொல்லிய(Evolution theory) இன்படி உண்டானார்கள் என்பது அறிவிற்குப்பொருந்தும்.

நம் ஆற்றலால் அடையும் விஷயங்கள் கடவுளருளால் உண்டாகிறது என்று சொல்லி நம்மை மடமையில் ஆழ்த்தி நம் பணங்களைப் பறிக்கிறார்கள். நம்பூசாரி ஆடுகோழியோடு நின்றுவிடுகிறான் என்றால் கோடி கோடியாய் பரம்பரையாய் சாப்பிட வழிவைத்துக்கொள்கிறான்.

கச்சேரிக்கும் வேசித்தனத்திற்குமேயன்றி எத்தனைபேர் பக்தியில் ஈடுபட்டு ஆலயங்களுக்குச்செல்கிறார்கள்.

ஒருவன் சம்பிரமமாய் வாழ்ந்து சகல சுவையோடு கூடிய போஜனம் உண்ண இன்னொருவன் பசிப்பிணி

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் ஷை நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.

# குடி அரசு.

ஈரோடு 1932 செப்டம்பர் மீ 11-உ

## கார்ப்பொரேஷனும், பிராமணீய பக்தியும்.

:0:

சென்னைக் கார்ப்பொரேஷனில் சென்ற 7-9-32 தேதியில் நடந்த கூட்டத்தில், சென்னைக்கு விஜயஞ்செய்யும் கும்பகோணம் சங்கராச்சாரியாருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிப்பதாகத் தீர்மானித்திருப்பதைக்கண்டு ஆச்சரியப்படுகிறோம்.

கார்ப்பொரேஷன் சபையானது நகரத்தின் சுகாதார நிலையைக்காப்பாற்றுவதற்கும், நகர ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிப்பதற்கும் ஏற்பட்டதென்பதை எவரும் அறிவார்கள். இவைகளின் பொருட்டு நகரமக்களிடம் வரிவசூலித்து, அப்பணத்தை நகர மக்களின் க்ஷேமத்திற்காகச் செலவு செய்து வருகிறது. ஒரு நகரத்திற்கு, தேச நன்மைக்காக, அதாவது அரசியல் அபிவிருத்திக்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பாடுபடக்கூடிய தலைவர்கள் விஜயஞ்செய்வார்களாயின், அவர்களுக்கு அந்த நகரசபை உபசாரஞ்செய்வது எங்கும் வழக்கமாக இருந்து வருகிறது. இப்படிச்செய்வது அந்தத்தலைவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், அவர்களுடைய உழைப்பைப் பாராட்டுவதற்கும் அறிகுறியாகும். ஜனங்களின் நன்மைக்காக உழைக்கும் உண்மையான அரசியல் வாதிகளுக்கும், சமுதாயச் சீர்திருத்த வாதிகளுக்கும், நகர மக்களின் வரிப்பணத்தைச் சிறிது உபசாரத்திற்காகச் செலவு செய்வது எந்த வகையிலும் தவறாகாது.

ஆனால், உலக நன்மையைச் சிறிதும் கருதாமல், தம்முடைய ஜாதி நன்மையை மட்டும் கருதுகின்றவர்களும், "மற்ற மதங்கள் யாவும் அழியவேண்டும் தம்முடைய மதம் மட்டிலும் ஓங்கவேண்டும் என்று நினைக்கின்றவர்களும், மற்றமக்களெல்லாம், "சூத்திரர்கள்" "இழிந்தவர்கள்" "சண்டாளர்கள்" அந்நியமதத்தினர்கள் அனைவரும் "மிலேச்சர்கள்" ஆகையால் அவர்களுடன் பழகுதலும், பேசுதலும் பாவம், அப்படிச்செய்தால் அதற்காகப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டும்" என்று கருதுகின்றவர்களும் ஆகிய குறுகிய மனப்பான்மையுடைய கூட்டத்தார்க்கெல்லாம், பொதுஜனங்களின் வரிப்பணத்திலிருந்து நடைபெறும் ஸ்தாபனம் உபசாரம் பண்ணுவதென்றால் அது எந்த விதத்தில் நியாயமுடையதென்று கேட்கின்றோம்.

உதாரணமாகச் சென்னைக் கார்ப்பொரேஷனை எடுத்துக்கொள்ளுவோம். அதற்கு வரிகொடுப்பவர்களில், கிறிஸ்தவர்களிருக்கிறார்கள்; முஸ்லீம்கள் இருக்கிறார்கள்; ஜைனர்களிருக்கிறார்கள்; புத்தர்களிருக்கிறார்கள்; பார்சிகளிருக்கிறார்கள்; சைவர்களிருக்கிறார்கள்: வைணவர்களிருக்கிறார்கள், இவ்வாறு பலதிறப்பட்ட மதத்தினர்களிருக்கிறார்கள். ஜாதிகளிலோ, ஆதிதிராவிடர்கள், ஆங்கிலேயர்கள், பார்ப்பனர்கள், அல்லாதார்கள், முதலிய இந்தியாவில் எவ்வளவு ஜாதிகள் உண்டோ அவ்வளவு ஜாதியினர்களும் சென்னை நகரில் வாழுகின்றார்கள். இவ்வளவு மதத்தினரிடமிருந்தும், ஜாதியினரிடமிருந்தும் வாங்கப்படும் வரிப்பணத்தினால் தான் கார்ப்பொரேஷன் நடைபெற்று வருகிறது என்பது யாருக்கும் தெரியாத விஷயம் அல்ல.

இந்தக் கார்ப்பொரேஷனால் இப்பொழுது உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கும் சங்கராச்சாரியாரைப்பற்றி நமது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. அவர் பிராமணர்களின் ஆதிக்கத்தையும், பிராமணீயத்தையும் வளர்க்க உதவி செய்பவர், சந்நியாசி வேடம் பூண்டவராயிருந்தாலும், யானை, குதிரை, ஒட்டை முதலிய மிருகவர்க்கங்களுடனும், ஆள்மாகாணங்களுடனும், உலக குரு என்று பெயர் வைத்துக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றுபவர். சுற்றுப் பிரயாணம் பண்ணும்போது, ஆங்காங்கே உள்ள பிராமணரல்லாத பணக்காரர்களிடம், பாதகாணிக்கை என்னும் பெயருடன் ஆயிரக்கணக்காகப் பொருள் பறிக்கின்றவர். ஏமாந்து பொருளைக் கொடுக்கும், பார்ப்பனரல்லாதார்களிடம், மேற்படி சங்கராச்சாரியார் நேரே பேசுவதுகூட பாவம் என்று நினைத்து, பக்கத்தில் ஒரு பிராமணரை வைத்துக்கொண்டு அவரிடம் பேசுவதுபோல பாவித்துக் கொண்டு பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதாரிடம்பேசுபவர்; பார்ப்பனரல்லாதாரிடம் பறிக்கும் பொருளைப் பிராமணபோஜனம் என்னும் பெயரால், பார்ப்பனர்களுக்கே வயிறு வெடிக்கும்படி விருந்து செய்பவர்; பார்ப்பனரல்லாதார்க்கு அவர்கள் சாப்பிட்ட சாப்பாட்டின் மீதத்தைப் போட்டால்கூட அதனால் தமக்குத்தோஷம் வந்துவிடும் என்று நினைப்பவர்; சுருங்கக்கூறினால், பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தி, கடவுள், வேதம், புராணம், என்பவைகளின் பேரால் பார்ப்பனரல்லாதார்களை அடிமைப்படுத்துவதற்கு வருணாச்சிரமதருமப்பிரசாரம் பண்ணுபவர்தான் சங்கராச்சாரியார் என்று சொல்லுவதில் எள்ளளவும் ஐயமில்லை.

இத்தகைய ஒரு சிறு கூட்டத்தைச்சேர்ந்தவருக்கு உலகமக்களுக்குக் கெடுதியையுண்டாக்கும், மதப்பிரசாரமும், வருணாச்சிரம தருமப்பிரசாரமும் செய்துவரும் ஒருவருக்கு, சகலமதத்தினர்க்கும், சகல ஜாதியினர்க்கும் பொதுவான ஒருசபை உபசாரம் செய்வதென்றால் அது பொதுஜன அபிப்பிராயத்திற்கு இசைந்ததாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், சென்னைக் கார்ப்பொரேஷனில் இது சம்பந்தமான விவாதம் நடந்தபோது சில அங்கத்தினர்கள் எழுப்பியஇரண்டொரு சந்தேகங்களும் கவனிக்கக்கூடியதாகும். அதாவது; ஒரு அங்கத்தினர்— "எலெக்ட்ரிக் லிப்டில்" ஏறி கவுன்சில் அறைக்கு வந்து நம்முடன்கலந்துகொண்டு உபசாரப்பத்திரம்பெற திரு. சங்கராச்சாரியார் ஒரு சமயம் விரும்பமாட்டார் என நினைக்கிறேன்" என்று கூறினார். இது உண்மையேயாகும். ரயில்வண்டி, மோட்டார்கார், ஆகாயவிமானம் முதலிய வாகன வசதிகள் ஏராளமாக இருக்கின்ற இக்காலத்திலும், பல்லக்கின் மேல் ஏறிக்கொண்டு மனிதர்களை சுமக்கச்செய்யும் பெரியார்கள், "எலக்ட்ரிக் லிப்டி"ன்மேல் அடி வைப்பதற்குத் துணிவார் என்பது சந்தேகந்தான். அப்படியேறுவது அவர்களுடைய மத சம்பிரதாயத்திற்கும், பழக்கவழக்கத்திற்கும், "தெய்வீகத்" தன்மைக்கும் விரோதமாக இருந்தாலும் இருக்கலாம். ஆகவே அவர் எப்படி கார்ப்பொரேஷன் சபைக்குள் புகுவார் என்பதில் சந்தேகம் உண்டாவது இயல்பு என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

மற்றொரு அங்கத்தினர் "இந்துக்களல்லாத மற்ற அங்கத்தினருடன் கைகுலுக்கித் தீட்டுப்பட்டுக்கொள்ள சங்கராச்சாரியார் சம்மதிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்" என்று ஒரு சந்தேகத்தை எழுப்பினார். அந்த அங்கத்தினர், அந்நிய மதத்தைச் சேர்ந்தவராதலால் சங்கராச்சாரியாரின் உண்மை நிலையறியாமல் இவ்வாறு கேட்டால் என்றே நாம் நினைக்கிறோம். பிராமணர்களைத் தவிர மற்ற இந்துக்களையெல்லாம், "சூத்தரர்கள்" அதாவது அடிமைப்பட்டவர்கள், விலைக்கு வாங்கப்பட்டவர்கள், வேசி மக்கள், சண்டையில் ஜெயித்துப் பிடித்துக்கொண்டுவரப்பட்டவர்கள் என்று கருதி அவர்களைப் பார்க்கக்கூடச் சம்மதிக்காதவர் என்பதைத் தெரிந்திருந்தால் அவ்வங்கத்தினர் இச்சந்தேகத்தை எழுப்பியிருக்கமாட்டார். ஆதலால், சங்கராச்சாரியார் பிராமணரல்லாத இந்துக்களையே தொட்டுக்கொள்ளாதபோது மற்ற மதத்தினரை எப்படித் தொட்டுக்கொள்ளுவார் என்று கேட்கிறோம்.

அன்றியும், "கடவுள்" என்பவரின் முகத்திற் பிறந்ததாகக் கூறிக்கொண்டிருக்கும் கூட்டத்தாரின் தலைவராகிய சங்கராச்சாரியாருக்குக் கார்ப்பொரேஷன் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுப்பதாகத் தீர்மானித்திருப்பதில் பல சங்கடங்கள் நேர இடமிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவிரும்புகின்றோம்.

முதலில், வேத சம்பிரதாயப்படி நடந்துகொள்ளுகின்ற ஒருவர், "மிலேச்சர்" என்று சங்கராச்சாரியாரால் கருதப்படுகின்ற ஆங்கிலேயர்களின் சம்பிரதாயப்படி அமைந்துள்ள ஒருசபைக்குள் பிரவேசிக்கலாமா, அச்சபையின் உபசரிப்பை ஏற்றுக்கொள்ளலாமா? என்னும் கேள்விகள் எழ இடமிருக்கின்றன. ஒருக்கால் இவைகளுக்கு ஏதாவது சமாதானம் சொல்லிக்கொண்டு உபசாரத்தை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தால், அப்பொழுது சங்கராச்சாரியார் சபைக்குள் வரும்பொழுது, அங்குள்ள பிராமணரல்லாத அங்கத்தினர்கள், முஸ்லிம் அங்கத்தினர்கள், கிறிஸ்தவ அங்கத்தினர்கள், ஆதிதிராவிட அங்கத்தினர் இவர்களெல்லாம் சபையில் இருக்கலாமா? இவர்கள் இருக்கின்ற

ஒரு கூட்டத்தின் நடுவில் சங்கராச்சாரியார் செல்லலாமா? அப்படி செல்லுவது அவருடைய வேத சாஸ்திரங்களுக்கு ஏற்குமா? என்னும் கேள்விகளும் எழுகின்றன.

அப்படிச் சங்கராச்சாரியார் சென்றாலும், எல்லா அங்கத்தினர்களும் இருந்தாலும், அங்கத்தினர்களும், சங்கராச்சாரியார் அவர்களும் ஒருவர்க்கொருவர் எவ்வாறு அறிமுகப்படுத்திக்கொள்வது? மரியாதை செய்து கொள்ளுவது? என்ற விஷயத்தில் தகராறு ஏற்பட இடமிருக்கிறது. அதாவது சங்கராச்சாரியார் சம்பிரதாயப்படி யாரும் அவரைக்கண்டவுடன் நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்பொழுது சங்கராச்சாரியார் நமஸ்காரம் பண்ணிக்கொண்டவர் பிராமணராயிருந்தால் தன் கையில் "பிரசாதம்" என்னும் பெயரால் சாம்பல் கொடுப்பார், பிராமணரல்லாதாயிருந்தால் மற்றொருவர் கையில் சாம்பல் கொடுக்கச்சொல்வார். இதுதான் சங்கராச்சாரியாரைக் கண்டு கொள்ளும் முறையாகும். கார்ப்பொரேஷன் உபசாரம் செய்யும்போது இந்த முறையை அனுசரிப்பதா? இம்முறைக்குக் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள் அனைவரும் சம்மதிப்பார்களா?

அல்லது ஆங்கில சம்பிரதாயப்படி, சங்கராச்சாரியார்வந்தவுடன் தலைவர் ஒவ்வொரு அங்கத்தினரையும் அறிமுகம் செய்துவைக்க, சங்கராச்சாரியார் அவ்வங்கத்தினர்களுடன் கைகுலுக்க வேண்டும்; இம்மாதிரி செய்ய அவர் சம்மதிப்பாரா? இப்படிச்செய்தால், அவருடைய கொள்கைக்கும், மதத்திற்கும், வேத சாஸ்திரங்களுக்கும் ஏற்குமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

அன்றியும், "சமஸ்கிருதம் ஒன்றுதான் தெய்வ பாஷை, தமிழ் சூத்திரபாஷை, இங்கிலீஷ் போன்ற அந்நிய தேசபாஷைகள், மிலேச்ச பாஷைகள்" என்ற கொள்கையுடைய சங்கராச்சாரியாருக்கு எந்த பாஷையில் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்போகின்றார்கள் என்றசந்தேகம்நமக்கு உண்டாகின்றது. சங்கராச்சாரியார் கொள்கைப்படி "தெய்வபாஷை" யாகிய சமஸ்கிருதத்தில் உபசாரப்பத்திரம் வாசிக்க கார்ப்பொரேஷன் துணியுமா? அல்லது "மிலேச்ச பாஷை" யாகிய ஆங்கிலத்தில் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தால் அதை சங்கராச்சாரியார் ஏற்றுக்கொள்வது அவருடைய கொள்கைக்குப் பொருத்தமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இந்தச் சங்கடங்களையெல்லாம் உத்தேசித்து, சங்கராச்சாரியார் அவர்களே "கார்ப்பொரேஷன் உபசாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்து விட்டால், இது ஒரு பெரிய கார்ப்பொரேஷன் சபைக்கு அவமானமல்லவா? இதுவரையிலும், கௌரவம் பொருந்திய கார்ப்பொரேஷன் உபசாரத்தை மறுத்தவர் யாரேனும் உண்டா?

ஆகையால் நாம் மேலே கூறிய விஷயங்களையெல்லாம் ஆலோசித்துப்பார்ப்பவர்கள் கார்ப்பொரேஷன் செய்த தீர்மானம்தவறானது என்பதை உணராமலிருக்க முடியாது. இவ்வாறே மதவாதிகளுக்கும், வருணாச்சிரம தருமிகளுக்கும் கார்ப்பொரேஷன் உபசாரம் செய்யத் தீர்மானிப்பதன் நோக்கம் என்ன என்பது தான் நமக்கு விளங்கவில்லை. எல்லா மதகுருக்களுக்கும், கௌரவம் செய்யவேண்டும் என்று கார்ப்பொரேஷன் தீர்மானிக்குமாயின், அபிப்பிராயப்படுமாயின், பிறகு அதன் உபசாரத்திற்கே கௌரவமில்லாமற் போய்விடும் என்பது நிச்சயம். சாதாரணமாகத் தெருவில் பிச்சையெடுத்துத் திரிகின்ற ஒரு பிச்சைக்காரனும் தன்னை மதகுரு என்று சொல்லிக்கொள்ளலாம். அத்தகைய மதகுருமார்களுக்கும் கார்ப்பொரேஷன் உபசாரம் செய்யத் துணியுமா? என்று தான் கேட்கின்றோம்.

அன்றியும், சங்கராச்சாரியாருக்கு உபசாரம் செய்யவேண்டுமென்னும் தீர்மானத்தை, அவரால் "சூத்திரர்" என்று கருதப்படுகின்ற திரு. ஜி. நாராயணசாமி செட்டியார் என்னும் பிராமணரல்லாத கனவான் கொண்டுவந்ததைப்பற்றியே நாம் மிகவும் வெட்கப்படுகிறோம். இத்தீர்மானத்தை, "ஜஸ்டிஸ்" கட்சியைச் சேர்ந்த பார்ப்பனரல்லாத அங்கத்தினர்கள், ஆதரித்தது அதிலும் வெட்கக்கேடான காரியமாகும்.

அன்றியும், சங்கராச்சாரியாருக்கு உபசாரப்பத்திரத்தைத் தயாரிக்க ஏற்படுத்தியிருக்கும் கமிட்டியில், திரு. வி. சக்கரைச்செட்டியார் என்னும் கிறிஸ்துவ கனவானும், திரு. பஷீர் அகமத் சையது என்னும் முஸ்லிம் கனவானும் சேர்ந்திருப்பதன் அர்த்தமும் நமக்கு விளங்கவில்லை.

இவற்றையெல்லாம் நினைக்கும் போது கார்ப்பொரேஷன் சபை, நகர நன்மையைக் கவனிக்கும் சபை மாத்திரமா? அல்லது மதப் பிரசாரம், வருணாச்சிரம தர்மப் பிரசாரம், பார்ப்பனப் பிரசாரம் செய்யும் சபையா? என்னும் சந்தேகங்களும் உண்டாகின்றன.

இதற்கு யார் எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும், கார்ப்பொரேஷன் இம்மாதிரி, வருணாச்சிரம தருமப் பிரசாரகர்களுக்கு உபசாரம் செய்வதை மேற்கொள்ளுமானால், அதையும், அதன் அங்கத்தினர்களையும், வருணாச்சிரம தருமசபை, 'வருணாச்சிரமதருமப் பிரசாரகர்கள்' "பிராமணீய பக்தர்கள்" என்று பொது ஜனங்கள் சாட்டும் குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாதென்று தான் நாம் கருதுகின்றோம்.

---

## அரசியல் வாதிகளுக்குப் புத்தி வருமா?

சென்ற 5—9—32ந்தேதி இந்தியா சட்ட சபையில் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் செய்த பிரசங்கம் தற்கால நிலைமையில்மிகவும்கவனிக்கத் தக்கதொன்றாகும். 'காங்கிரசானது, பயமுறுத்தலினால் சுயராஜ்யம் வாங்கிவிடலாம் என்னும் நோக்கத்துடன் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. காங்கிரஸ் செய்யும் போராட்டமானது பலாத்காரமில்லாதது, சாத்வீகமானது என்ற பெயருள்ளதாயிருப்பினும், உண்மையில் தேசத்தில், கலகத்தையும், அமைதியின்மையையும், பலாத்கார உணர்ச்சியையும் உண்டாக்குவதற்குக் காங்கிரசின் கிளர்ச்சியே காரணமாக இருக்கின்றது. ஆகையால், எந்த வகையிலும், காங்கிரசின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் செய்யாமலிருக்க முடியாது.' என்னும் அபிப்பிராயம் வைசிராயின் பிரசங்கத்தில் காணக் கிடக்கின்றது. இந்த அபிப்பிராயம் தவறானதென்று, நடுநிலைமையும், உண்மையும், பகுத்தறிவும் உள்ள எவரும் கூறமுடியாது என்றே நாம் கூறுவோம். இதற்கு உதாரணமாகச் சென்ற பம்பாய்க்கலகத்தையும், வங்காளத்தில் நடைபெற்றுவரும் புரட்சி இயக்கத்தையும் கூறலாம். இதையும் வைசிராய் அவர்கள் தமது பிரசங்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பொதுவாகவே, காங்கிரசின் மூலம், சத்தியாகிரகம் 'சட்டமறுப்பு' 'சாத்வீகப்போராட்டம்' என்னும் பெயர்களால், சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடக்கும் விதத்தை மக்களுக்குக் கற்பிக்கப்பட்ட பிறகே தேசத்தில், கலகமும், புரட்சியும், சண்டைச் சரவுகளும் பெருகலாயின என்னும் உண்மையை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், காங்கிரஸ் இந்த மாதிரியான போராட்டத்தை ஆரம்பித்ததனால் தேசம் அடைந்த லாபந்தான் என்ன என்பதையும் சிறிது ஆலோசித்துப் பார்த்து உண்மையைத்தெரிந்து கொள்ளுகின்றவர்கள், நாம் கூறுவதைப் பற்றிச் சிறிதும் குறைகூற மாட்டார்கள் என்பது திண்ணம்.

அதாவது காங்கிரஸ் 'சுயராஜ்யம்' என்னும் பேரால் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தவுடன், உண்மையிலேதேசிய வெறி கொண்ட சில இளைஞர்களும் வேறு வேலை செய்து பிழைக்க வழிதெரியாத மற்றும் பல வாலிபர்களும் அதில் சேர்ந்தார்கள்; தலைவர்கள் என்பவர்கள் இடுகின்ற கட்டளைகளைச் செய்து, தடியடியும், பிரம்படியும்பட்டுச் சிறை சென்று கஷ்டப்படுகிறார்கள். தலைவர்கள் என்பவர்களில் சிலர் சிறை சென்றாலும் அவர்கள் 'ஏ' வகுப்பில் சௌக்கியமாக உட்கார்ந்திருந்துவிட்டு வீடுவந்து சேர்கிறார்கள். கடைசியாக, சட்டசபைத் தேர்தலோ, ஸ்தலஸ்தாபனத்தேர்தலோ வருகின்ற காலங்களில், காங்கிரசின் பேரால் தலைவர்களாக விளங்கியவர்களும், காங்கிரஸ்அனுதாபிகளாக விளங்கியவர்களும், ஒன்றுந்தெரியாத ஏழை இளைஞர்களைச் சிறைக்கனுப்பக் காரணமாயிருந்தவர்களும், 'தேசாபிமானி' என்னும் பட்டத்துடன் தேர்தலில் அபேட்சகர்களாக நின்று பதவி பெறுகிறார்கள். இதுதான் சட்டமறுப்பில் நாம் அடையும் பலன். எந்த வகையில் பார்த்தாலும், ஏழைகளின் உழைப்பும், கஷ்டமும், தியாகமும், பணக்காரர்கள் பட்டம் பதவி பெறுவதற்கு உபயோகப்படுகிறதே யொழிய வேறு கடுகளவாவது ஏழை மக்களின் நன்மைக்கு உபயோகப்படுவதில்லை யென்பதை நாம் அறிந்துதானிருக்கிறோம்.

அன்றியும், நீண்டநாளாகச் சட்டமறுப்புப் போராட்டம் நடந்து கொண்டிருப்பதனால், நாட்டின் வியாபாரமும், கைத்தொழிலும் பாதிக்கப்படுகிறதே தவிர அவைகளிலும் ஒருவித முன்னேற்றத்தையும் காண வழியில்லாமலிருக்கிறது.

எந்த வகையிலும், சட்டமறுப்பு இயக்கம் ஒழிய வேண்டுவது

அவசியமாகும். ஆகையினால், காங்கிரஸ் தலைவர்கள், புத்திசாலித்தனமாகச் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு, உண்மையில் நாட்டு மக்கள் முன்னேற்றம் அடையத் தக்கவழியில் உழைப்பார்களானால் அவர்கள் உழைப்பு பலனளிக்கக் கூடியதாகும். இன்றேல் அவர்கள் உழைப்புவீண் என்பது நமது அபிப்பிராயமாகும். சேனைகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளும், உள்ள ஒரு அரசாங்கத்துடன், ஒன்றுமில்லாத பேர்வழிகளாகிய வெல்லிக்காய் மூட்டைகள், 'கைராட்டின'த்தாலும், 'ஆத்ம சக்தி'யாலும் எதிர்த்துப் போர்செய்து வெற்றிபெற முயற்சிப்பது, நமது நாட்டில் உள்ள மதப்பித்துக் கொண்டவர்களுக்குச் சாத்தியமானது' என்று தோன்றினாலும், உண்மையறிவுடையவர்களுக்கு அயல்நாட்டு மக்களுக்கும் சிரிப்பைஉண்டாக்காமல்போகாது. ஆகையால் "சத்தியாக்கிரகம்" "ஆத்மசக்தி" என்னும்பைத்தியக்கார கொள்கைகளையும், அவைகளின் மூலம் உண்டான சாத்விகச் சட்டமறுப்புப் போராட்டம்" என்பதையும் அடியோடு நிறுத்திவிடுவதுதான் புத்திசாலித்தனமாகுமென்பதை பகுத்தறிவுடையோர் எவரும் மறுக்க முடியாது.

இப்படியில்லாமல், இன்னும் காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்திக்கொண்டே போவார்களாயின், வைஸ்ராய் அவர்கள் கூறியிருப்பதுபோல தேசத்தின் அமைதியை உத்தேசித்து அவ்வியக்கத்தை அடக்க, அரசாங்கத்தாரும் பொது ஜனங்களும் தங்களால் ஆனமுயற்சியைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லையென்பதை அறிவுடைய எவரும் ஒப்புக்கொண்டுதான்தீரவேண்டும்.

அடுத்தபடியாக வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பைப்பற்றி வைஸ்ராய் அவர்கள் கூறியிருக்கும் அபிப்பிராயமும் குறிப்பிடத்தக்கதாகும்அவர் "இந்தியப் பிரதிநிதிகள், வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாத காரணத்தாலேயே பிரிட்டிஷ் பிரதமமந்திரியால் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்ய நேர்ந்தது. ஆகவே அம்முடிவை இந்தியர் ஒப்புக்கொள்ளவேண்டும். அல்லது தங்களுக்குள் வேறு சமரசமான முடிவை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அல்லது எல்லாவற்றையும் விட்டுவிட்டு வேறு அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு முயற்சிக்காமல் சும்மா இருந்துவிடவேண்டியது. இம்மூன்றைத் தவிரவேறு வழியில்லை" என்றுகூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

மூன்றாவது கூறிய அரசியல் சுதந்தரம் வேண்டாம் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசுவது, இதுவரையிலும் இந்தியா அடைந்துவந்திருக்கும் அரசியல் அபிவிருத்திக்கும் நோக்கத்திற்கும், முரண்பாடானதாகும் என்பதை வைசிராயே குறிப்பிட்டு விட்டார் ஆகவே மற்ற இரண்டு விஷயங்களை அதாவது வகுப்புப்பிரச்சினைத்தீர்ப்பை ஒப்புக்கொள்ளுவது அல்லது வேறு முடிவுசெய்துகொள்ளுவது என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டால் வேறு சமரசமான முடிவு செய்துகொள்ளுவது என்பது நமது நாட்டு அரசியல் வாதிகளால் முடியாத காரியம் என்பதை நாம் கோபுரத்தின் மேல் நின்றுகொண்டும் கூறத் தயாராயிருக்கிறோம். ஆகவே இம்முடிவை ஒப்புக்கொள்ளுவதைத்தவிர வேறுவழியில்லையென்பதை நாம் முன்னமே எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

ஆகையால் இனியேனும் நமது நாட்டு அரசியல் வாதிகள் நாட்டின் உண்மை நிலையையும், அரசாங்கத்தின் பிடிவாதத்தன்மையையும், அதனோடு எதிர்த்துப் போராட முடியாத நமது சக்தியற்ற தன்மையையும் உணர்ந்து சட்ட மறுப்புப்போராட்டத்தை நிறுத்திவிட்டு வகுப்புப்பிரச்சினைத்தீர்ப்பையும் ஒப்புக்கொண்டு மேலே ஆகவேண்டிய காரியங்களைச்செய்ய முன்வருவார்களா என்று கேட்கிறோம்.

உண்மையில் நமது நாடு சுதந்தரமடைய வேண்டுமானால் நமது மக்கள் அனைவரும் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் கிடைக்கப்போகும் மாகாண சுயாட்சியின் அதிகாரத்தைக்கொண்டு சாதிமத வித்தியாசங்களை ஒழித்துச்சமத்துவத்தை உண்டாக்கி தேசத்தை முன்னுக்குக்கொண்டு வர முயலுவதே அறிவுடைமையாகும். இதைவிட்டு வீண்கூச்சல் போட்டுக்கொண்டு இன்னும் காந்திவிழாவும், நேருவிழாவும், பாரதமாதா விழாவும், தீபாவளிப் பிரசாரமும், நடத்திக்கொண்டு மக்களை மூடர்களாகவும், குருட்டு பக்தியுடையவர்களாகவும், பகுத்தறிவில்லாதவர்களாகவும் ஆக்க முயல்வது பிராமணியப்பிரசாரத்திற்கும், வருணாச்சிரமதருமப் பிரசாரத்திற்கு அடிகோலுவதாகுமென்றுதான் நாம் கூறுவோம்.

வைசிராய் அவர்களின் பிரசங்கத்தையும், இதுவரையிலும் செய்த அரசியல் ஆர்ப்பாட்டத்தால் நாம் அடைந்த பலனையும் கவனிப்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வரக்கூடும் என்று நாம் உறுதியாகக்கூறுவோம்.

---

## கருப்பிணியின் மறுமணம்.

---

நெல்லூரைச்சேர்ந்த சண்டி டிவிஷன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கும் காவலியைச்சேர்ந்த 40 வயதுள்ள பலிஜா வகுப்பைச்சேர்ந்த கொண்டம்மா என்னும் மாதுக்கும் கடந்த 6-9-32ந்தேதி விவாகம் நடைபெற்றது. அம்மாதுக்கு 11 வயதுள்ள ஒரு மைந்தனிருக்கிறான். இது சமயம் அம்மாது கருப்பிணியாயிருக்கிறாள்.

கொன்னகிரி தாலூகா போர்டு தலைவர், வக்கீல் கொண்டாலாராமுலு செட்டியார் முதலியோர் விவாகத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

---

## பரவசமடைந்த பக்தர்கள்.

### படகு கவிழ்ந்து மூழ்கினர்.

---

கள்ளிக்கோட்டைக்கருகிலுள்ள திருப்பிறையார் சாமி தெரிசனத்திற்காக சுமார் 40, 50 பக்தர்கள் ஓர் தோணியில் சென்றார்கள். அதில் சுமார் 20 பேரே இருக்கமுடியுமாம் பாதிவழியில் தோணி திடீரெனக் கவிழ்ந்துவிடவே யாவரும் ஆற்றில் வீழ்ந்து மூழ்கினர். அதில் 6 சவங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சிலர் நீந்திக்கரை சேர்ந்தனர் சுமார், 7-மாத சிசுவொன்று படகிலிருந்ததாகவும் அதுவும் மூழ்கி மாண்டதாகவும் தெரிகிறது. சர்வஜீவ தயாபராகிய ஆண்டவனது திருவிளையாடலின் மகிமையே மகிமை.

---

## பசுபதி—குமாரசாமி திருமணம்.

---

5--6--32-ந் தேதியில் நடைபெறுவதாகக் குறிப்பிட்ட திருமணம், பெண்ணிற்கு சாரதா சட்டப்படி பருவ வயது பூர்த்தியாகாமலிருந்தால் அன்று உறுதி செய்தபடி, 5—9—32ல் திருநெல்வேலியில் மிகவும் சிக்கன முறையில் சீர்திருத்தத் தோழர்கள் முன்னிலையில் நடைபெற்றது என தோழர் எ. இராமநாதர் எழுதுகிறார்.

## செங்கம் தாலுக்காபோர்டு தேர்தல்.

---

புதுப்பாளையம்— சுயமரியாதைத் தோழர்—பி. ஆர்—குப்புசாமி அவர்கள், யாதொரு போட்டியுமின்றி, செங்கம்தாலுக்காபோர்டு அங்கத்தினராக, தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ஒரு நிருபர்)

---

# கோயில் சீர்திருத்தம் அவசியமா?

---

## திருமதி குஞ்சிதம் சொற்பொழிவு.

---

கீழ்த்தூர கலைக்கழகத்தின் ஆதரவில் சென்ற 2-9-32ந்தேதி "கானமந்த"ரில் திரு. எஸ். எஸ். ராஜகோபாலன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. திரு. கல்யாணசுந்தரமுதலியார் முதலிய பலர் கவனிப்போராயிருந்தனர். திருமதி குஞ்சிதம் பி. ஏ., எல். டி., 'தென்னிந்திய கோவில்களை உண்மையான கலைக்கழகங்களாக்குவதெப்படி' என்ற விஷயமாய்த்தனது சர்ச்சையை (Discussion) ஆரம்பித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:— தற்காலக்கோவில்களில் சுகாதாரக்குறைவும், அநாகரீகமானதும் மூடநம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட தீயவழக்கங்கள் நிறைந்திருக்கின்றன. நாட்டில் பசியும், பிணியும் மக்களை வறுத்தும் பொழுது அனாவசியமாக மக்கள் உற்சவங்களிலும் கூத்துக்களிலும் ஏராளமான பொருள் விரயமாக்கப்பட்டு வருகிறது. தேவதாசிகள் என்ற ஒரு ஸ்தாபனம் கோவில்களினாலேயே நிலைபெற்று வருகிறது. அது அடியோடு ஒழிக்கப்படவேண்டும். கோயில்களின் தனத்தை பொது ஜனக்கல்வியை பரப்புவதிலும், புத்தகசாலைகள் ஏற்படுத்துவதிலும், உண்மை கலைஞானத்தை பரவச்செய்வதிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று பேசினார்.

பின்னர்கோயில்சீர்திருத்தும்அவாவில் கோவில் உண்மைத்தத்துவத்தை நழுவவிடலாகாதென்று திருமதி ராஜலட்சுமியும், தெய்வபக்தி ஏற்படுவதற்கு கோவில்கள் அவசியமென திரு. அய்யாசாமிராவும், திரு. பொன்னம்மாளும் விவாதித்தனர். திரு. குருசாமி பேசுகையில் மதத்தின் பேராலும், கடவுள் பேராலும், அநேக கொடூர செயல்களும், வஞ்சகமும், மூடநம்பிக்கைகளும் வளர்கின்றனவென்றும் பகுத்தறிவுக்கொவ்வாத செயல்கள் நாட்டில் பரவுமளவும் கோயில்கள் எவ்வித மானிட சுக வாழ்வையும் உண்டாக்காது என்று வற்புறுத்தினார்.

திரு. ராஜகோபால் அவர்கள் கோயில் சீர்திருத்தத்தின் அவசியத்தை வற்புறுத்தி அதைக்கையாளும் முறையை விளக்கிப்பேசினார்,

---

அரசனும், ஆண்டியும் பிறவியிலொன்றே.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யால் என் வருந்தவேண்டும். ஒருவன் மட்டிற்கு மிஞ்சி சாப்பிடுகையில் அவனிடம் எஞ்சிய உணவை ஒருவன் எனக்குக்கொடு என்பது அபகரிப்பதா? நாமங்களைச்சாத்திக்கொண்டு பஜனை செய்கிறோமென்று அநாகரீகமாய் உடலெல்லாம் நிறந்துபோட்டுக்கொண்டு போவதும் பிறநாட்டார் நகைக்கும்படி நடப்பதும் மதமா?

சுண்டல் நைவேத்தியம் இவைகள் கிடைக்குமென்று அங்கு சென்று தான் கற்ற கல்வியையும் மறந்து தன் தொண்டை கிழிய சத்திகுறைய பண்டரிநாதவிட்டலே, பாண்டுரங்க விட்டலே என்று கத்துகிறான். இவனுக்கு செய்யத்தக்க நல்ல வேலையில்லையா? உண்ண உணவில்லாத ஏழை மக்களைக்கண்டு புறக்கணிக்கிற நீ, வீணை நின்றுவிட்டு ஆடுவதா பக்தி, அதுதானா உண்மதம், வைஷ்ணவ அல்லது சிவதர்மம் என்று வீண் பறைசாற்றி திரிவது இக்காலத்தில் முடியாதென்று விரிவாகவும் அழகாகவும் பேசினார்.

### திருமதி குஞ்சிதம் முடிவுரை.

மணி ஆயிற்று, ஆகையால் சுருக்கச்சொல்லல்வேண்டும். யாவரும் ஆண்கள் ஆனபடியால் தங்களைப் பற்றியே பேசினார்கள். ஒருவரே பெண்கள் உரிமையைப்பற்றிச் சிறிது பேசினார். சுயமரியாதைக்கோட்டையென்கிற இந்த ஊரில் இத்தனைபேர் இவ்வளவு ஆரவாரத்தோடு பேசுகையில் பெண்கள்சிலரே இங்குவந்தனர். பலருக்கு நீங்கள் அவர் உரிமைகளைக் கொடுப்பதில்லையென்பது வருந்தத்தக்கது. நாங்களும் கற்று இனி பெண்களாகத்தனி மகாநாடு நடத்த வேண்டியதுதான் பண்டுபல நூல்களும் விதிகளும் செய்து எங்களைத்தாழ்த்தியதுமன்றி இப்பவும் எங்கள் சுதந்திரத்தை மறுக்கிறீர்கள்.

இங்கு வந்திருந்த பெண்களும் சோர்வுடன் எழுந்துபோனதைப்பார்த்தால் நீங்கள் அவர்களை வைத்திருக்கும் அடிமைத்தனம் நன்கு விளங்குகிறது. உங்களில் என் சிலர் எழுந்துபோய் வீட்டுவேலையைச்செய்துகொண்டு பெண்கள் மகாநாட்டைக் கவனிக்கும்படி செய்யக்கூடாது. ஆண்களைக்கண்டவுடன் பெண்கள் மரியாதை செய்ய வேண்டுமாம், ஆண்கள் மாத்திரம் எவ்வளவு ஆபாசமான விஷயத்தையும் அவர்கள் முன் செய்யலாமாம், வீட்டு வேலைகள் முதலிய வற்றிலுங்கூட ஆண்பெண் இருவரும் சமத்துவத்தை அனுஷ்டிக்கவேண்டும்.

மலையாளத்தில் பெண்களுக்கு மட்டும் சொத்துரிமை நம் நாட்டிலோ ஆண்களுக்கு மட்டும். ஆண்பெண் இருவருக்கும் சொத்துரிமைவேண்டும். இது அவர்களுக்கு இருக்குமேயானால் உங்களைப்போல் செயற்கரிய காரியங்களைச்செய்ய ஆற்றல் அவர்களுக்கும் உண்டு.

நான் சொல்லியவற்றை நீங்கள் ஆராய்ந்து நல்லவைகளைக்கொள்ளுங்கள், இல்லையேல் தள்ளுங்கள். என்னைச்சில மாணவர்கள் இப்பொழுது ஆங்கிலத்திலே முடிவுரை கூறும்படிக்கேட்டுக்கொண்டனர். அது பாமர மக்களாலும் பெரும்பாலாரோலும் விளங்கிக்கொள்ள முடியாது ஆகையால் நான் தமிழில் பேசினேன்.

கடைசியாக தோழர் பி. எஸ். தண்டபாணி அவர்களால் இம்மகாநாட்டை நடத்துவதற்கு இடம் கொடுத்துதவி திரு. அ. ரு. ராமசாமி செட்டியார் அவர்கள் பெருந்தன்மையைப்பற்றியும், மகாநாட்டில் கலந்து வேலைகள் செய்த வாலிபர்களுக்கும் மகாநாட்டிற்கு தீவிரமாக வசூல் செய்து கொடுத்த தோழர்களுக்கும் இம்மகாநாட்டை நடத்திக்கொடுத்த தலைவர் அவர்களுக்கும் இம்மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதிகளுக்கும் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தாரின் சார்பாக வந்தனோபசாரம் கூறியபின் மகாநாடு இரவு 9-மணிக்கு முடிவு பெற்றது.

## மதப்பித்தால் வந்த வினை.

---

### எதிரிக்குக் கடுங்காவல்.

யாழ்ப்பாணத்தில் சென்ற ஜூன் மாதம் 14-ந் தேதி இரவு பருத்தித்துறையைச் சேர்ந்த குடத்தனை வாசியான தேவசகாயம் என்பவரை சந்தன் கொலை செய்ததாக யாழ்ப்பாணம் அசைஸ்கோட்டில் தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று அசைஸ் கமிஷனர் மிஸ்டர் பார்பர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. ஆங்கிலமறிந்த அறுவர் ஜூரிகளாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். பிராஸிக்கியூஷன் தரப்பில் சர்க்கார் லாயர் மிஸ்டர் தொணிகலேயும் பிரதிவாதி தரப்பில் மெசர்ஸ் எஸ். டி. நம்போ, ஹேரயர் வணிசிங்கம், எஸ். மயில்வாகனம் மூவரும் ஆஜரானார்கள்.

அக்கொலை விஷயமாகப் பிராஸிக்கியூஷன் தரப்பில் கூறப்பட்ட விபரமாவது:—"பிரஸ்தாப தினமன்று மணக்காட்டில் சந். செபஸ்தியான் நாடகம் நடிக்கப்பட்டது. ஓர் இந்து இராஜகுமாரன் பக்கவாத ஜன்னியால் அவஸ்தையடைந்து வந்ததாகவும், அவர் சிவலிங்கத்தை வணங்குவதைவிட்டுக் கிறிஸ்தவரானால் அவ்வியாதி நீங்குமென்றும் ஓர் செம்படவர் கூறினதாகவும் அப்படி அந்த இந்து இராஜகுமாரன் செய்தபொழுது அவ்வியாதி நீங்கினதாகவும் கதையாக அந் நாடகம் நடிக்கப்பட்டது. அந் நாடகம் நடந்துகொண்டிருக்கும்பொழுது குடிவெறியிலிருந்த பிரதிவாதியும் மற்றும் இருவரும் கூச்சல்போட்டு இடையூறு செய்து கொண்டிருந்தார்கள். அந் நாடகக் கம்பெனியின் முதலாளியான கொலையுண்டவர் பிரதிவாதியிடம் சென்று அவன் கூச்சல்போடக் கூடாதெனக் கண்டித்தார்.

உடனே அவன் வெகுண்டெழுந்து அவரைக் கத்தியால் குத்தி வீழ்த்தினான்."

பிரதிவாதி திடீரென மனதினெழுந்த கோபத்தால் கொலைசெய்தானேயல்லாமல் வேண்டுமென்று கொலைசெய்யவில்லையென்று 5-ஜூரிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதன்பேரில் நீதிபதி பிரதிவாதிக்கு 15-வருஷம் கடுங்காவல் தண்டனை தீர்ப்புச்செய்தார்.

### சுயமரியாதைத் திருமணம்.

திருச்செந்தூர் தாலுகா ஆத்தூர் கிராமத்தில் திரு. என். முத்துக்குமாரசுவாமியவர்கள் புதல்வன் திரு. எம். நயினார் அவர்களுக்கும், மேற்படியூர், திரு. கே. பி. நல்லபெருமாள் அவர்கள் புதல்வி திருமதி அம்மாத்தாய் அம்மாளுக்கும். 2-9-32ந்தேதி வெள்ளிக்கிழமையன்று காலைசுமார் 10 மணிக்கு சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தை திருநெல்வேலி சுயமரியாதைச்சங்க காரியதரிசி திரு. எஸ். குற்றாலலிங்கம் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது.

இந்த திருமணத்தின் ஞாபகார்த்தமாக "குடி அரசு" பத்திரிகைக்கு ரூ ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.


## பிள்ளையில்லாத குறை உண்டா?

என் மனைவி 8-மாத கர்ப்பமாக இருக்கிறது.

"........15 வருஷ காலமாக மாத விலக்குக்காலங்களில் வயிற்று நோயினால் மிகத் துன்பப்பட்டுக்கொண்டும், பிள்ளையே இல்லாமலுமிருந்த என் மனைவி பல வைத்தியர்களிடம் மருந்து சாப்பிட்டும் குணமாகாமல் டாக்டர் தருமாம்பாள் கொடுத்த கருப்பரோக எண்ணெயையும் அமுதாரத்னகரத்தையும் சாப்பிட்டு வந்ததில் வயிற்றுவலி முற்றும் நீங்கி உடம்பில் நல்ல வலுவுண்டாகி இப்பொழுது 8-மாத கர்ப்பமாகவும் இருந்து வருகிறது..........."

ம. வாசுதேவ முதலியார்,
எம். எஸ். எம். ரயில்வே ஆபீஸ் கிளார்க்
45 திருப்பள்ளி தெரு, சென்னை.
17—7—1932.

இருந்தால்
டாக்டர் தருமாம்பாள் தயாரிக்கும்
### பெண்கள் சஞ்சீவி

என்னும் கர்ப்பரோக எண்ணெயை சாப்பிடுங்கள் நீண்ட நாள் பிள்ளை இல்லாதவர்களுக்கு புத்திரோத்பத்தியைஉண்டுபண்ணும் சூதகவயிற்றுநோயை (Dysmenorrhoea) நீக்கும் கர்ப்பமுர்ச்சையை (Hysteria) குறைப்படுத்தும் நடைபட்டோ அல்லது ஒழுங்கு தப்பியோ உள்ளருது தோஷங்களைநிவர்த்திக்கும். பொதுவாகமாதவிலக்குக்காலங்களில் உண்டாகும் கோளாறுகள் அனைத்தையும் தீர்க்கும்.

1 புட்டி விலை ரூபாய் 2—0—0

கர்ப்பரோக எண்ணெய் மூன்று நாள் சாப்பிட்டு முடிந்த பிறகு 'அமுதாரத்னகரம்' ஒரு மண்டலம் 40 நாள் சாப்பிடவேண்டியது மிக அவசியம்.

அமுதாரத்னகரம் 40-நாள் மருந்து ரூ. 4—0—0

திடகாத்திரமும் நல்ல அழகும் அமைந்த ஆண் குழந்தையைப் பெற்றோம்.

"........எனது மனைவிக்கு மாத விலக்கு சம்மந்தமான கோளாருக்குக்கொடுத்த கர்ப்பரோக எண்ணெயின் பயனாய் 11-வருஷங்களாக குழந்தையே இல்லாமல் இருந்த என்மனைவி கருத்தரித்து நல்ல அழகும் திடகாத்திரமும் அமைந்த ஒரு ஆண் குழந்தையைப்பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றோம். இத்தப்பெருஞ்செல்வத்தைத் தந்த லேடி டாக்டர் தருமாம்பாள் அவர்களுக்கு நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்..........."

டி. சி. பராங்குச முதலியார்,
சென்னை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்,
21—7—1932.

சோல்டிஸ்ட்டிரிபியூட்டர்ஸ்.

அருணகிரி அண் கோ., தபால் பெட்டி நெ. 222. 49 லிங்க செட்டிதெரு, சென்னை

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

னொருவர்களுக்கு அடிமைப்பட்டும் சமயசாஸ்திரங்களுக்கு கட்டுப்பட்டும் சாதிகட்டுபாட்டுக்கு அகப்பட்டு அல்லல்படுவனோ? உங்கள் சமூகத்தையும் உங்கள் நாட்டையும் அன்னியர்மதிக்கப்படவேண்டுமானால். சமூகசீர்திருத்த சேனைகளை திரட்டுங்கள். சாதி கட்டுபாடு என்று கூறும் ஆபாசகளஞ்சியங்களை கழுத்தைப்பிடித்து, நாட்டைவிட்டு தள்ளுங்கள். பொய்யும் புணைசுருட்டும் புழுகும் புராண புலவர்களை பிடரியை பிடித்து சமூகத்தை விட்டுவெளியில் தள்ளுங்கள். ஓ!! வாலிபதமிழ் சகோதரர்களே! ஜெர்மெனியர்கள் போலும், ஆங்கில யந்திரங்கள் போன்றும் பீரங்கி, துப்பாக்கி, வெடிகுண்டுகளுக்கு உங்கள் மார்பைதாங்கி நிற்கவும் போர்முனையினின்று போர்தொடுக்க உங்களை தாரைஊதி அழைக்கவில்லை. சீனர்களைப்போல் ஒத்துழையாபோர் தொடுக்க அறைகூவி அழைக்கவில்லை. தேசிய வீரர்கள்போல வரிமருப்பு சத்தியாக்கிரகம் போன்றவைகளிலீடுபட்டு கருங்கல்லுடன் முட்டிக்கொண்டு மண்டையுடைப்பட்டு மாண்டு மடியவும், சிறையிலடைப்பட்டு சிறமபபடவும், ஆஸ்பத்திரியில் அவஸ்தைபடவும். மகான்காந்தி விரும்பி அழைப்பதைப்போல் உங்களை அழைக்கவில்லை, உங்கள் தமிழ்சமூக சகோதரி சகோதரர்களை மிருகத்திலும் கேடாக மதித்து அன்னியர் எள்ளிநகையாட செய்விக்கும் கடவுள், மதம் சாமி, சாஸ்திரம், பூசாரி, புரோகிதம் மோட்சம், நரகம், திதி. தெவசம், போன்ற கட்டுப்பாடுகளை அறுத்தெரியவும் அறிவற்று, கல்வியற்று கால்வயிறு கஞ்சியற்று அணியஆடையற்று, அறியாமைப்படுகுழியில் வீழ்ந்துமக்கள் பரிதவிக்கச்செய்யும் வைதிககோட்டையைதகர்த்தெரியவாருங்கள். குழந்தையை மணமுடித்து மகிழ்விக்கும்மடத்தனத்தை மண்டையிலடிக்கவும், பருவப்பெண்களை விதவைஎன்று வீட்டிலடைக்கும் மோசத்தைப் போக்கலாம். புண்ணியம். மோச்சம், நரகம், மென்று கூறும் பூச்சாண்டிகளை நசிக்கிபிளியவும் வைதிக வெறியர்களை எதிர்க்க வாலிபர்களே வாருங்கள் போருக்கு என்றுதான் அழைக்கிறேன். "கடவுள் இல்லைஎன்று கூறுகின்றார்கள்" என்று திரித்துக்கூறும் திண்ணைவேதாந்த சோம்பேரிகளை வங்காளகுடாக்கடலில் கட்டி விழ்த்தும் சீர்திருத்த அறச்சாலையில்சேருதிவீரருகசேருங்கள்.

அச்சமில்லை. அச்சமில்லை.
அச்ச மென்பதில்லையே
அச்சமில்லை. அச்சமில்லை.
அச்ச மென்பதில்லையே
ஆண்டியேனும், அரசரேனும்,
யாவரேனும், மாகுக
அன்பில்லாது, துன்புசெய்யும்
அவரையான் மதித்திடோம்
பிரபுஎன்றும், ஏழைஎன்றும்.
பேதமில்லை எங்களில்
பேசுகின்ற உயர்வுதாழ்வு.
பித்தமெமெக்கில்லையே
பெண்ணுலகை பேதைஎன்று
பெருமை பேசும்பேடிகள்
ஆணுலக ஆணுவத்தை
அடக்க நாங்கள் பின்னிடோம்
தோழருக்கு வேலையில்லா
தொல்லையே துடங்கினும்
துணிவு இழந்து பணிவமென்ற
சொல்லெமக்கில்லையே
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே

என்றவெற்றியுரைத்து வீறவாளேந்திவாலிபர்களே! வாருங்கள் போருக்குலைதீகர்களை எதிர்க்க.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. 378 of 1928
E. P. R. No 996 of 1932.

கிருஷ்ணய்யங்கார் [Died] பார்த்தசாரதி அய்யங்கார் வகைரா—அசல் வாதிகள்.

தாராபுரம் தாலூகா காங்கயத்திலிருக்கும் வயிரவஞ் செட்டியார் குமாரர் அழகப்ப செட்டியார்—மேடோவர் வாதி.

அவனாசி தாலூகா பழங்கரை கிராமம் அவனாசி லிங்கம்பாளையத்திலிருக்கும் மாரப்ப கவுண்டன் மகன் பொன்னே கவுண்டன் 2 ஷை யூர் 2-ம் பிரதிவாதி மகன் மைனர்ராக்கியாக்கவுண்டன் 3 கார்டியன் தகப்பன் 2-ம் பிரதிவாதி—2, 3 பிரதிவாதிகள்,

ஷை 2, 3 பிரதிவாதிகளுக்கு தெரிவிக்கும் நோட்டீசு என்னவென்றால்:—


ஷை நெம்பரில் ஷை மேடோவர் வாதி ஷை டிக்கிரியை மேடோவர் பெற்றிருப்பதால் தன்னை ஊ. வாதியாக அங்கீகாரம் செய்து கொண்டு ஷை டிக்கிரியை நிறைவேற்ற வேணுமாயும் ஷை டிக்கிரியில் கண்ட அடமான சொத்துக்களை ஏலம்போட வேணுமாயும் மனு தாக்கல் செய்து ஷை நெம்பரில் எலஇஸ்தியாரில் கண்ட ஷரத்துக்களை நிரணியப்பதற்காகவும் 1932 of செப்டம்பர்-௴ 21 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது ஷை தேதியில் நீர் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராகத்தவறினால் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படும் என்கிற சங்கதியை அறியவும்.

[Sd] M. K. Govindarajalu
Chettiar,
Advocate for
Decree Holder.
3-9-1932 Tirupur.

---


இனம்! இனம்!!

## கிராமபோன்.



ஓட்டோக்களிலெல்லாம் சிறந்தது டாஸ்டாஜ் ஓட்டோதான். மணம் சிறந்தது, வாசனை மிக்கது, மூடியைத்திறந்ததும் பூந்தோட்டத்திலிருப்பதாகவே எண்ணுவீர்கள். எவ்வித மனோ நோயையும் போக்கவல்லதிவ்ய ஔஷதம்.

1 பாட்டல் விலை அணு 8.

6 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு டேபிள் டைம்பீஸ் இனம்.

9 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு வாட்டர் புரூப் ரையின் இனம்.

12 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு கிராமபோன் இனம்.

கிராமபோன் ரிகார்டுகள் டஜன் 12 ரூபாயாகும். பாக்கிங் தபால் செலவு வேறு இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள் 1-மாத மட்டுந்தான்.

Universal Stores
Bandagal Salkia
Howrah.

ANANGARANGABATIKA.
*(Enjoyment Pill)*
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**


---

மதம் மதமென மதி கெட்டலையாதே.


## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

சிசுருத்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்,

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கை கால் அசதி<br>இடுப்புவலி<br>பலக்குறைவு<br>ஆயாசம்<br>நரம்புத்தளர்ச்சி<br>சொர்ப்பனஸ்கலிதம்<br><br>சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.<br><br>ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும் | திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.<br><br>ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,<br><br>1-சேர் டப்பி ரூ. 2-8-0 |

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

ற்குத்தக்கவர்கள், ரஜஸ்வலை விவாகத்திற்குத் தகாதவள், அவளைத் தானம் செய்கிறவன் நரகத்தை அடைகிறானென்று பிரகஸ்பதி சொன்னார். பனிரண்டாவது வயது வந்தபின் (ருது உண்டாவதற்கு முன்) எவன் தன் கந்நிகையைத் தானம் செய்யவில்லையோ அவனுடைய பிதிர்க்கள் அந்தப் பெண்ணினுடைய பிரதிமாத ருது மலத்தைப் புசிக்கிறார்கள். விவாகஞ் செய்வதற்குமுன் பெண்ணைத் தன் வீட்டில் ரஜஸ்வலையாகப் பார்த்த அந்தப் பெண்ணினுடைய தாய் தந்தை மூத்த சோதரன் இம்மூவரும் நரகத்தையடைகிறார்கள். இதனால் ருதுவாகிறதற்குமுன் கந்நியாதானம் செய்யாதவன் தன் பிதுர்க்களை நரகத்தில் தள்ளுவது போல் தானும் குடும்பத்துடன் நரகத்தில் விழுகிறானென்பது சொல்லப்பட்டது. ஸ்திரிகளுக்கு மனதில் காமம் தோன்றும் காலம் வந்தால் சோமதேவனும், ருதுபருவம் வந்தால் கந்தருவனும், ஸ்தனம் புறப்பட்டால் அக்கிதேவனும் அவர்களை அனுபவிக்கிறார்களாகையால், கந்நிகை ரஜஸ்வலையாவதற்கு முன்னமே பிதா அவளை யோக்கியனாகிய ஒருவனுக்கு விவாகஞ்செய்விக்க வேண்டுமென்று ஸம்வர்த்தனர் சொன்னார். ஒரு பெண் லஜ்ஜையடைந்து தன் யோனி முதலிய அங்கங்களை எவ்வளவு காலம்வரையில் மறைத்துக் கொள்ளவில்லையோ அதுவரையிலும் அவள் கன்னிகை யென்னப்படுவாளென்று புராணசாரத்தில் சொல்லப்பட்டது. எட்டு வயதுடைய பெண் கௌரி என்னப்படுவாள். அவளைத் தானஞ் செய்தவன் சுவர்க்கலோகத்தையடைகிறானென்றும், ஒன்பது வயதுடையவள் ரோஹிணி என்னப்படுபவள், அவளைத் தானம் செய்தவன் வைகுண்டத்தை அடைகிறான் என்றும், பத்து வயதுடையவள் கந்நிகை யென்னப்படுவாள், அவளைத் தானஞ் செய்தவள் பிரம்ம லோகத்தை யடைகிறான் என்றும் அதற்கு மேல் ரஜஸ்வலை என்னப்படுபவள் அவளைத் தானஞ் செய்தவன் ரௌரமென்னும் நரகத்தை அடைகிறான் என்றும்.............. கூறிக்கொண்டே தன் பிரசங்கத்தை நீட்டிக்கொண்டு போனார். யானும் என்தான் இவரிடம் பேச்சுக் கொடுத்தோம் என்று என்று எண்ணினேன். யான் போகவேண்டிய ரயில்வே ஸ்டேஷனும் சமீபித்தது, உடனே ஐயரை நோக்கி நல்லது ஐயா! நான் இரங்க வேண்டிய ஸ்டேஷன் சமீபித்துவிட்டது. பராசரர் சொன்னார், வியாசர் சொன்னார், மனு சொன்னார் என்பதெல்லாம் இருக்கட்டும். எல்லா சாஸ்திரங்களும் மக்களுக்காகவே செய்யப்பட்டிருக்கிறதே யொழிய அச்சாஸ்திரங்களுக்காக மக்கள் உண்டாக்கப்படவில்லை. அக் காலத்திலே இந்தச் சட்டங்கள் ஆவசியப்பட்டிருக்கலாம். அதிலும் சிறிது நன்மையும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இப்பொழுது இவைகளினால் முற்ற முற்றத் தீமைகளுண்டாவதை யறிந்தும் நம் புத்திக்கும், யுக்திக்கும் அவைகள் தீதானதெனத் தெரிந்தும் அவைகளை நம்பி அதன்படி நடக்கவேண்டுமென்று கூறல் அறிவுடைமையா? என்று பல ஆதாரங் காட்டி விளக்கினேன். அவர் கோபப் பார்வையோடு நீங்கள் இராமசாமி நாயக்கன் கட்சி போலிருக்கிறது. அதனால்தான் இப்படியெல்லாம் பேசுகின்றீர்கள். பகுத்தறிவினால் தெய்வ கட்டளையின் தன்மையை உணரமுடியாது. மத விஷயத்தில் பகுத்தறிவை உபயோகிப்பது மடமையாகும். எல்லா விஷயத்திலும் பகுத்தறிவை உபயோகித்தால்—என்று ஆரம்பித்த உடனே நான் ஐயா! நீர் பகுத்தறிவற்றவர் அல்லது பகுத்தறிவிற்குப் பகைவர் என்று முன்னமே யறிந்திருந்தால் உம்முடன் இத்துணை தூரம் பேசியிருக்கமாட்டேன். நீர் ஆங்கிலம் பயின்றிருப்பதினால் உமக்குக் கொஞ்சமாவது பகுத்தறிவு இருக்குமென்றெண்ணினேன். பகுத்தறிவு அற்ற மாக்கள் குழுவில் சேர்ந்தவரானபடியினால்தான் அறிவியல் இயக்கத் தந்தையாய் விளங்கும் அறிஞர் ஈ. வெ. இராமசாமி அவர்களை மரியாதைக் குறைவாய் பேசினீர்போலும். பகுத்தறிவற்ற மக்கள் நெடுநாள் இந்தியாவில் வாழ முடியாதென்பதை திட்டமாயறிந்து கொள்ளும் என்றேன். யான் இறங்கவேண்டிய ஸ்டேசனில் புகைவண்டியும் நின்றது. நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு யானும் என்வழியே சென்றேன்.

எத்துணை தூரம் ஆங்கிலப்புலமை, வடமொழிப் புலமையுடையவராயினும் மதத்திற்கு அடிமைப்பட்டார் பகுத்தறிவற்ற விலங்கினங்கட்கொப்பாவாரேயன்றி மனித வர்க்கத்திற் சேர்ந்தவராகார். மத நம்பிக்கையுடையோர்களிற் சிலர் பகுத்தறிவு வாதியாய் விளங்குவதற்குக் காரணம் அவர்கள் தம் மதக் கட்டுப்பாடு அல்லது நம்பிக்கை என்னும் பிடிப்பினின்று தங்களைச் சிறிது தளர்த்திக்கொண்டதினால்தான் பகுத்தறிவு வாதியாய் விளங்குகின்றார்கள். சுயமரியாதைக்காரர்கள் தங்களது மதப் பைத்தியத்தை "குடி அரசு" என்னும் அமிர்த சஞ்சீவியையுண்டு தங்களின் பைத்தியத்தை ஒழித்துவிட்டதினாலன்றோ, இப் பூமியை ஆதிசேடன் என்னும் பாம்பு சுமந்துகொண்டிருப்பதாயும், அதற்கு ஒரு தோள் வலியிண்டானால் மற்றொரு தோழிற்கு மாற்றுவதால் பூமியதிர்ச்சியேற்படுவதாயும்; ஓர் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டி கடலுக்குள் கொண்டுபோய் ஒழித்துவைத்துக்கொண்ட பொழுது விஷ்ணு பன்றியவதாரமெடுத்துக் கடலினுள் சென்று பூமியை வெளியே கொண்டுவந்ததையும்; பூமியை ஓர் பெண்ணாகவும் அப் பெண்ணிற்குப் புருஷனும் மக்களும், உண்டென்று கூறியிருப்பதையும் மலைகளுக்கு சிறகு இருந்தது, அவைகள் திருவிளையாடற் புராணகாலத்தில் கூட பறந்து சென்றதென்பதையும் குடத்திற் பிறந்த குள்ளனாகிய அகஸ்தியர் கடல்களை யெல்லாம் சாப்பிட்டதையும்; சாகரர்கள் கடல் வெட்டிய கதையையும்; நட்சத்திரங்களை யெல்லாம் உயிருள்ள தேவர்களான ஆண்களும் பெண்களுமா மென்றும், இடியும் மின்னலும் மேகமும் ஒவ்வொரு தேவர்களாலே உண்டாக்கப் படுகிறதென்றும், ஒற்றைப் பார்ப்பான் பூனூல்காரன், பூனை, எண்ணைக்குடம், விதவை, விறகுக் கட்டு முதலியவைகள் எதிரில் வந்தால் கெட்ட சகுனமுண்டாகுமென்றும் ஜீவகாருண்யமற்று பால்ய மணம் செய்யவேண்டும், விதவா மணம் கூடாது. விவாகரத்து கூடாது. கலப்பு மணம் கூடாது. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கக்கூடாது. ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி, உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்றவைகளும் மக்கள் பிறந்தது முதல் இறப்புவரையும்—என்—அதற்கு பின்னரும் நடைபெறும் வீண் சடங்குகளான பிள்ளை பிறந்த பதினாறும் நாள் சடங்கு, நாற்பதாம் நாள் சடங்கு, பெயரிடும் சடங்கு, ஜாதகமெழுதுஞ் சடங்கு, சோறூட்டுஞ் சடங்கு, ஒரு வயது நிரம்பிய தும் பிறந்த நாள் சடங்கு, (ஜன்ம நட்சத்திரச்சடங்கு) படிக்கவைக்குஞ் சடங்கு, திருமணச் சடங்குகள் மறுவீட்டுச் சடங்கு, சிசுமந்தச் சடங்கு, சஷ்டிபூர்த்திச் சடங்கு, மரணச் சடங்கு, காடாற்றுச் சடங்கு, கல்லெடுப்புச் சடங்கு, மாசியச் சடங்கு, சிரார்த்தச் சடங்கு முதலிய ஆயிரக்கணக்கான சடங்குகளையும், பழக்க வழக்கங்களிலுண்டான மூடச் செயல்களையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளையும், பெண் மக்களுக்கு செய்துவரும் கொடுமைகளையும் இன்னும் எண்ணத்தொலையாத—மிஸ். மேயோ போன்ற அந்நிய நாட்டுப் பெண்களும் நம்மை இழித்துக்கூறிவரும் அநாகரீகச் செயல்களையெல்லாம் வேரோடு கல்லியெறிந்து பகுத்தறிவுச் சோதியைப் பிரகாசிக்கச் செய்யவிடாது தடுக்கும் மதவெறியினின்று மீளச் செய்ததையும் யாரே மறுக்க வல்லார்? எனவே மக்கள் உலகில் பெருந் தீங்கு விளைவித்து இந்து மக்களின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடைக் கல்லாயிருக்கும் மூட நம்பிக்கையை ஒழித்து பகுத்தறிவு ஜோதியை வளரவிடாது தடுத்து நிற்கும் மத வெறியை முதலில் வேரோடு பெயர்த்தெரியவேண்டும்.

(தொடரும்)

---

## இமாமதுல்ஸிப்பான் சங்க விசேஷ அறிக்கை.

இச்சங்கத்தின் விசேஷ கூட்டம் 12-8-32 மாலை 6-மணியளவில் ஷை சங்க ஹாலில் தலைவர் கே. எம். செய்யதலி சாகிபவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. அவ்வமயம் காரியதரிசி அவர்களால் சபையோர்களை வரவேற்று சபையை அவசரமாக கூட்டப்பெற்றதின் காரணத்தை விளக்கி காட்டப்பெற்றபின் (கிருஅத்) ஓதப்பெற்றது. அடுத்தபடியாக தலைவரவர்கள் எழுந்து ஓர் முஸ்லீம் மற்றவரை பிரார்த்திக்க வேண்டியதின் அவசியம்பற்றி குர்ஆன் ஹதீஷிலுள்ள அநேகம் மேற்கோள்களுடன் தெளிவாய் விளக்கி காட்டியபின் இச்சங்கத்தின் போஷகர் ஆலிஜனாப் சீ. மு. ஜமால்தீன் சாகிபவர்கள் தம்தாய் பதிவிட்டேகி இப்பூபதி வந்திரங்கியதின் நிமித்தம் அன்னவர்களுக்கு இச்சங்கத்தாரால் ஓர் வரவேற்பு உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. உபதலைவர் மீ. மு. அப்துல்கரீம் சாஹிபும், காரியதரிசி ப. சி. யூ. அப்துற்றஸ் சக்சாகிபுவும், பொக்கிஷதார் சீ. கா. அபீதாலிப்சாஹிபுவும் தனித்தனியே கனம் போஷகரவர்களை வரவேற்று வந்தனோபசாரவாழ்த்துக் கூறினார்கள் அடுத்தபடியாக தொண்டர்கள் பல அழகிய கீதம்பாடியபின் தலைவரவர்கள் எழுந்து ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றி சற்று விளக்கிகூறினார். பின் போஷகரவர்களெழுந்து தமக்கு அழித்த அன்பொழுகும் உபசாரபத்திரத்தைதான் மிகுந்த அன்புடன் ஆதரிப்பதாயும், தன்னால் கூடுமானவரை இச்சங்க மாணவர்களாகிய தொண்டர்களுக்கு உதவி புரிந்துவர தீர்மானித்திருப்பதாயும் தலைவரவர்கள் கேட்டுக்கொண்டபடியே தற்கால இச்சங்கத்திற்கு அவசியமான நூல்களையும் கூடுமானவரை வாங்கியழிக்க தயாராக இருப்பதையும் கூறிபல நீதிநூல்களை தருவிக்க காரியதரிசிக்கு அனுமதியளித்து அமர்ந்ததும் எல்லோரும் எழுந்து நின்று சங்கத்தின் வாழ்த்துப்பா கூற (பாத்திஹா) ஓதி சுமார் 6-30 மணியளவில் சபை இனிது கலைவுற்றது எனஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

# நமது சந்ததியார் நலம் பெறவேண்டுமானால்.....?

## நம்மக்களை எவ்வாறு பயிற்றல்வேண்டும்?

(திருமதி ஆர். அன்னபூரணி)

"என்னாட்டினும் மேவிய நன்னா" டென நம்மவர்களால் ஏற்றிப் போற்றிப்புகழப் பட்டாலும்,—"ஞான ஒளி நிரம்பிய நாவலந்தீவெ." ன நம்மூதாதையர் ஏட்டுச்சுவடிகளில் எழுதிவைத்திருந்தாலும், இன்றைய நிலைமையில் என்னாட்டிலும் இழிந்தபின்னாடாகவே இந்நாடிருப்பதையும், அறியாமை என்னும் அந்தகார இருள் நிறைந்து, மக்களை விழிகண் குருடாய் ஆக்கி அலக்கழித்து வருவதையும், நேர்மை காண விரும்பும் எவரேமறுப்பர்?

பண்டைய இந்தியாவின்நிலை எவ்வாறிருந்த போதிலும், தற்கால இந்தியாவின்நிலை எவ்வாறிருக்கின்ற போதிலும், இனிவருங்கால இந்தியமக்கள் எவ்வாற்றானும் முற்போக்கடைந்த, எழில்மிகு தன்மையராய் விளங்கி, இந்நாட்டை "என்னாட்டிலும் மேவிய நன்னாடாக" த்திகழும் வண்ணம் செய்யத்தக்க வேலைகள்யாவை என்பதை ஆராய்ந்தறிந்து அவற்றைக் கடைப்பிடித்தலே அறிவுடையோர்க்கான செயலாம்!

இவ்வழிநின்று நோக்குங்கால், நாம் நமது சந்ததியாரை இப்பொழுது பழக்கும் மாதிரியிலேயே வருங்கால இந்திய மக்களின் குணவிசேடங்களுமிருக்கு மாதலின், "நாம் நமது சிறுவர் சிறுமியரை எவ்வாறு பயிற்றுவித்தல்வேண்டும்" என்பது பற்றி ஈண்டுச்சற்று ஆராய்தல் பொருத்த முடையதேயாம்!

ஆதலின், மக்கட் செல்வத்தைப் பெற்றோரே! "தந்தை மகற்காற்று நன்றியவைத்து முந்தியிருப்பச்செயல்" எனுமொழியும், "ஈன்றபொழுதிற்பெரிதுவக்கும் தன்மகனைச்சான்றோன் எனக்கேட்ட தாய்" எனுமொழியும் நமக்குப்போதிப்பதென்னவென்பதைச்சற்று உய்த்துணருங்கால் ஒருதந்தை தன்பிள்ளைக்குச் செய்யும் மகத்தான உதவியாதெனில் தன்பிள்ளை, கல்விகளில் சிறந்த போறிஞர்கூடியுள்ள சபையில் முற்பட்டிருக்கச்செய்தலாம் என்பதே! இதனால் தன்மகனைக்கலா வல்லவனாக ஆக்கிவிடுதலே ஓர் தந்தை செய்யக்கடமைப்பட்டுள்ள செயலாகுமென்பது பெறப்படுகின்றது!

அவ்வாறு தன்மைந்தன் கல்வியறிவு பெற்று அவ்வறிவின் ஒழியையுமெய்தி உலகில் தான் செய்யத்தக்கது எது? தகாதது எது? எனப்பகுத்தறிந்து நல்வழிகொண்டு, அல்வழி நீக்கிநடந்து, அதனால் உலகோர் அவனை "சற்புத்திரன்" எனக்கூறுங்கால், அதனைச்செவியுறும தாயானவள், மிகுந்த கஷ்டத்திற்குப் பின்னர் குழந்தையைப்பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் பன்மடங்கு உயர்ந்த மகிழ்வை அடைவாள், என்பது நாம் முன்னர் குறித்த இரண்டாவது "குறட்பா" வின்விரி பொருளாம்!

எனவே, தோழர்காள்! உலகில் விஞ்ஞான உலகே பிரமிப்படையத்தக்க அதியற்புத சாதனங்களைக் கண்டுபிடித்த அமெரிக்க அறிஞர் "தாமஸ் ஆல்வா எடிஸன், பயமென்பதையும், முடியாதென்பதையும் தனது அகராதியிலிருந்தே விலக்கி, சுத்த வீரர்களுக்கோர் முன்மாதிரியாய் நடந்து வழிகாட்டி என்றுமழியாப் புகழ்பெற்ற சக்ரவர்த்தி 'நெப்போலியனையும்,' நாடக உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளவாறு தொண்டாற்றிய ஆங்கிலக்கவி "ஷேக்ஸ்பியரையும்" தாங்கள் மனிதர்கள் என்ற உணர்ச்சியேயற்று உறங்கிக்கிடந்த ரஷியமக்களைத்தட்டி எழுப்பி தலைநிமிர்ந்து நிற்கத்தக்க புரட்சியையுண்டுபண்ணி வெற்றிபெற்ற ரஷிய வீரர் 'லெனினை" யும், இத்தாலிய மக்களுக்கும், சீனமக்களுக்கும் உணர்ச்சியூட்டி உயர்நிலைக்கு வழிகாட்டிய இத்தாலிய வீரர் "முசோலினி" யையும், சீனப்பெரியார் "சன்யாட்சனை" யும், 'ஐரோப்பாவின் நோயாளி' யாய்நலிந்து கிடந்த துருக்கியை 'ஐரோப்பாவின் பலசாலி' யாய் ஆக்கிய துருக்கியவீரர் "முஸ்தபா கமால்பாஷா" வையும் இன்னும் நமது நாட்டு ஞானசூரியனுக்கும் புத்தர், பெருமான், வீரதிலகங்களாகும் அசோகர், அக்பர், சிவாஜீ, பிரதாப்சிங், தர்க்காபாய், விமலாதேவி, அரசி ஜான்பீபி' இராணிமங்கம்மாள் இன்னும் ஒளவை, மணிமேகலை போன்ற கலைவல்லரசிகளையும் உலகிற்களித்தவர்கள் அவ்வவரது தாயும் தந்தையுமாகிய பெற்றோர்களேயன்றோ?

"இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்பதற்கிணங்க, குழந்தைகள் தங்கள் இளமையில் எவ்வெவற்றைக் காண்கின்றனவோ, அவற்றையெல்லாம் தமது உள்ளத்தில் நன்குபதியவைத்துக்கொள்கின்றன. அவைகள் பெரியவைகளாய் வளருங்கால் அக்குழந்தைகள் தமது பாலியத்தில் கற்றுக்கொண்டவையும் கூடவே வளர்ச்சியடைகின்றன. களங்கமற்ற குழந்தைகளின் மனமென்னும் வயலில் போடப்படுகிற எத்தகைய கொள்கை யென்னும் விதையும் முளைகிளம்பி, அவர்களுடனேயே சிறுகச்சிறுகவளர்ந்து, இறுதியில் பெரியமரமாய், எவ்விதத்தாலும் அழிவுறாது நிலைத்து நின்று, தான் வளர்ச்சியடைந்த மனிதனுக்கு நன்மை, தீமை ஆகியவற்றில் தன் தன்மைக்கேற்ற எதையோ ஒன்றைஅவனுக்குக்கனியாகக்கொடுக்கின்றது.

எனவே, தொட்டிலில் துயில் கொள்ளும் பருவத்தில் எவற்றைக் காண்கின்றனவோ, அவற்றைக் குழந்தைகள் தம்முள்ளத்தில் பதியவைத்து தம்முடனேயே வளரச்செய்வதால் அவைகள் இளமையில் கற்றவை தீயனவயாயின் தீயவிருக்ஷத்தையும், நல்லவையாயின் நல்ல விருக்ஷத்தையும் தம்முடன் வளரச்செய்து, அவற்றின்பயனாக தீமை, நன்மை ஆகிய கனிகளைத்தாமும் அனுபவித்து பிறர்க்கும் அதனையே தருகின்றன. பிற்காலத்தில் அவர்கள் உள்ளத்தில் வெகு ஆழமாகவேறான்றிவிட்ட அம்மரத்தை (கொள்கைகளை) எவராலும் அப்புறப்படுத்தற்கியலாது எனவே, "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில்" என்னும் முதுமொழி ஈண்டு மெய்ப்பிக்கப்படுகின்றமை காண்க!

சிறுகுழந்தைகள் தம்மிளம் பிராயத்தைப் பொதுவாகப்பெரும்பாலும் தமது பெற்றோர்களுடனேயே கழிப்பதும், சிறப்பாக அக்காலத்தைத் தமது தாய்மார்களுடனேயே கழிப்பதும் யாவருமறிந்த உண்மையாகும். ஆதலின், தாய்மாரது குணவிசேடங்களும், பழக்க வழக்கங்களுமே விசேஷமாக அக்குழந்தைகளின் மனதில் ஊன்றி வளர்கின்றன, இதிலிருந்து, தமது பிள்ளைகள் சற்குணசம்பன்னராய்த்திகழ வேண்டுமென விரும்பும் பெற்றோர்கள் தமது பழக்கவழக்கங்களை நல்லமார்க்கத்திலேயே நடத்திவர வேண்டுமென்பது பெறப்படுகின்றதன்றோ?

ஆனமைபற்றி, நமது வருங்கால சந்ததியார்கள் நற்குணக்குன்றுகளாயும் திண்தோள் வலிமிக்க வீரரேறுகளாயும், விழுமிய ஒழுக்கம் செறிந்த பழுதிலாபெரியோராயும், செல்வத்தில் சிறந்த சீமான்களாயும் இலங்க வேண்டுமாயின், நாம்கையாள வேண்டியவை எவைஎன்பவற்றை கீழே தருகின்றோம்.

1. குழந்தைகளைப் பெற்றதாய் தந்தையார் கூடியவரையில் சுத்தமான ஆடை உடுத்தி, தங்கள் வீட்டையும் சுத்தமாக வைத்துக்கொள்ளல்வேண்டும்.

2. வீட்டிலுள்ள சாமான்களை தாறுமாறாக இறைத்து அதைக்காணும் குழந்தைகளின் மனதில் "ஒழுங்கீனம்" என்ற தன்மையும், வீட்டுச் சாமன்களைப் பேணுவதில் அசிரத்தையும் குடிபுகும்படிச் செய்யாமல், ஒவ்வொரு சாமானையும் குறிப்பிட்ட இடத்தில் வைத்து எடுக்கப்பழகவேண்டும்.

3. சிறுகுழந்தைகள் மல ஜலவிசர்ஜனம் செய்த காலத்தில் அவற்றைஉடனே அப்புறப்படுத்தி குழந்தைகளையும் சுத்தம் செய்வதைவிட்டு அக்குழந்தைகள் அவ்வசுத்தங்களிலேயேகிடந்துழலும் வண்ணம் விட்டிருத்தல் கூடாது.

4, குழந்தைகள் தவழுங்காலத்தில் அவைகள் விளையாடுமிடங்களில் குப்பை கூளங்களும், வேறுஎவ்வித அசுத்தங்களும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

5. குழந்தைகளுக்கு "உற்றுநோக்கும் சக்தி [Observation] அதிகமாதலின், அவை அப்பருவத்தையடைந்த பின்னர் அவைகளின் எதிரில் பெற்றோர் தங்களுக்குள்ளாகவேனும் அன்றி பிறரிடத்திலேனும் தகாதவார்த்தைகளையுபயோகிப்பதும் சச்சரவிட்டுக்கொள்வதுங்கூடாது.

6. குழந்தைகள் தமது நான்கு அல்லது, ஐந்தாவது பிராயத்தை அடைந்தவுடன் தங்கள் கண்ணிற்படும் ஒவ்வொரு பொருளையும் உற்றுநோக்கி அவற்றின்வரலாற்றை அறியவிரும்பி சதாஅவற்றைக்குறித்துக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்குமாதலின், பெற்றோர் பொறுமையுடன் கூடியவரையில் குழந்தைகளின் சந்தேகத்தை விளக்கவேண்டும். இம்மாதிரிச்சமயங்களில் குழந்தைகளின் அச்செயல் சிறிதுசிரமம் தரத்தக்கதாகவே இருக்குமெனினும் அதற்காகக் கோபித்து அவர்களை அடிப்பதும், திட்டுவதும், அவர்களது சந்தேகத்தை விளக்க மறுப்பதும் கூடாது. அப்படிச்செய்வது சிறுவர்களின் சிந்தனைசக்தியை அடியுடன் கெடுத்து விடுவதாகும்.

7. சிறுவர்கள், திருடர், பொய்யர், மதுவருந்துவோர் முதலிய இழிதகைச்செயலாளர்களிடம் சகவாசம் வைத்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

8. சிறுவர்களுக்குக் கதைகேட்பதில் மிக்க ஆர்வமுண்டாதலின், வீரத்தையும், தேசபக்தியையும், அஞ்சாமையையும், நல்லொழுக்கங்களையும் புகட்டத்தக்க கதைகளை அவர்களுக்குக் கூறவேண்டும். இவ்வாறு கூறுகையில் அறிவுக்குப்பொருந்தாதனவும் அனுபவத்திற்குமுரண்பாடானவும் ஆனவரலாறுகளை அவர்களுக்குச்சொல்லக்கூடாது. 'நெப்போலியன்,' 'ஷேக்ஸ்பீயர்' 'லெனின் கமால்பாஷா' ரபீந்தர நாத்தாகூர், ஜெகதீஸ்சந்திர போஸ், முதலானோரின் அரிய திறமைகளையும், அவர்கள் மேல் நிலையடைந்த வரலாற்றையும் கதா ரூபமாக அவர்களுக்குக்கூறவேண்டும்.

9. சிறுவர் சிறுமியர் தங்களுக்கு வியப்பைத்தருவதான இடி, மின்னல், மழை, சுழல்காற்று, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவற்றின் விவரங்களை அறிய ஆவலுடன் வினவுவார்களாயின் அவற்றின்

உண்மைத்தத்துவங்களை ஆராய்ச்சியாளர் கண்டுரைத்தபடி அவர்களுக்குக் கூறவேண்டும். இதைத்தவிர்த்து இடியை 'கடோத்கஜனின் கர்ஜனை' யென்றும், 'குண்டோதரன் வண்டியோட்டி விளையாடுகிறானென்றும், மழையை 'தேவேந்திரன் அனுப்பியிருக்கிறான்' னென்றும், 'மின்னலை வானம் பிளந்து வெள்ளிபுலகைகாட்டுகிறதென்றும், சுழல்காற்றை பேய்க்காற்' றென்றும், சந்திரனைக் 'கடவு' ளென்றும், 'அவன் தேய்ந்து தேய்ந்து வளர்கிறா' னென்றும், அதிலுள்ள களங்கத்தை 'கூனக்கிழவி' கொட்டை நூற்கின்றாள்' அல்லது 'அப்பம் சுடுகிறாள்' என்றிவைபோன்றும் அசட்டுத்தனமான வரலாறுகளைக் கூறாமலும் சூரியன் ஒற்றைச்சக்கர ரதத்தில் உலகத்தைச் சுற்றிவருகிறானென்றும், நக்ஷத்திரங்களை பெண்களென்றும் கூறி குழந்தைகளின் மூளையை மாவலியாக (களிமண்ணாக) ஆக்காமல் அவர்களுக்கு விஞ்ஞான விஷயங்களைச் சிறுகச்சிறுகக்கூறவேண்டும்.

10. பொய் புராணக்குப்பைகளையும், மதியையழிக்கும் விதி என்னும் தன்னம்பிக்கையற்ற தன்மையினையும், 'என்செயலாவதொன்றுமில்லை' என்ற சோம்பேறிப்பல்லவியையும்—ஆகிய இந்த அபத்தங்களின் வாடையே குழந்தைகளின்மேல் வீசாதபடி பார்த்துக்கொள்வதில் வெகுகண்டிப்பாயிருக்கவேண்டும்.

11. நரகம், சொர்க்கம், வைகுண்டம் கைலாசம், கடவுள், பேய், பூதம், ஆகிய முட்டாள்தனங்களை சிறுவர் சிறுமியரின் காதுகளில் விழாதபடிமிகுந்தஜாக்கிரதையுடன் நோக்கவேண்டும்.

12. குழந்தைகளின் சிறு விஷமத்தனங்களை அடக்குவதற்காக வேண்டி 'அதோ பூனை' 'இதோ எலி' 'அங்கு பூச்சாண்டி' 'இங்குப் பேய் பிசாசு' 'தோட்டத்தில் இரண்டு கண்ணன்' என்பனபோன்ற கோழைத்தனத்தையும், பயங்கொள்ளித்தனத்தையும் ஊட்டக்கூடிய சொற்களை அவர்களிடம் உபயோகித்து பயப்படுத்தல் கூடாது.

13. வீட்டில் இராமன், கிருஷ்ணன், பரமசிவன், காளி, சூலி, பத்துத்தலை இராவணன், ஆயிரங்கை கார்த்த வீரியார்ஜுனன் போன்ற படங்களை வைக்கக்கூடாது.

14. இன்றைய இந்தியாவின் ஏழ்மைத்தன்மையையும், அடிமை வாழ்வினையும், தொழிலாளரின் துயரத்தையும், பெண்டிர் சமூகத்தின் குறைபாடுகளையும், பணக்காரரின் திமிரையும், சுகாதாரக்கேட்டையும், ஜாதிமதப்பூசல்களின் அட்டூழியங்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் வரலாற்றினையும் சிறுகச்சிறுக சிறுவர் சிறுமியரின் பக்குவத்தையும் உள்ளக்கிளர்ச்சியின் நோக்கத்தையும் அறிந்து அவர்கள் மனதில் நன்கு பதியும் வண்ணம் கூறல்வேண்டும்.

15. சிறுவருக்கும், சிறுமியருக்கும் முதலாவதாகத் தாய்மொழியையும், பின்னர் உலகப்பொது மொழியையும், கைத்தொழிற்கல்விகளையும் குறைவரக்கற்றுக்கொடுப்பதில் பெற்றோர் விசேஷகவனம் செலுத்தல் வேண்டும்!

16. முறையான தேகாப்பியாசத்தை காலமும், இடமுமறிந்து சிறுவர் சிறுமியருக்குப்பழக்கவேண்டும்.

17. பெற்றோர் தங்கள் அருமைக்குழந்தைகளின் மேல் வைத்த ஆர்வத்தால் அவர்கள் மழலைச்சொற்களைக்கேட்கவேண்டி 'அம்மாவைத்திட்டு' 'அப்பாவைக்கழுதையென்று உதை' என்று தூண்டி அவர்களுக்குக்கெட்ட வழக்கங்களை உண்டு பண்ணக்கூடாது. ஏனெனில் பின்னர் அப்பிள்ளை பெரிதாக வளர்ந்த காலத்தும் இப்பழக்கம் தொடர்ந்து பெற்றோர் உற்றாரிடத்தில் அவர்களுக்கு அலக்ஷியத்தையுண்டு பண்ணச்செய்யும்.

18. குழந்தைகள் நன்றாக வளரவேண்டுமென்றெண்ணி நேரந்தவறிய நேரங்களிலும் அடுத்தடுத்தும் அகப்பட்ட தின்பண்டங்களை அவற்றின் வயிற்றினுள் திணித்து, அதனால் அவர்களைப் பெருந்தீண்டிகளாக்குவதுடன் ஜீரணக்கருவிகளும், கேடடைந்து 'கண்திருஷ்டிக்கழிப்புப்' பொம்மைகள் போல் ஆக்கிவிடுதல் கூடாது.

19. 'ஆணுக்குப் பெண் தாழ்ந்தது' 'பாபஜென்மம்' என்பது போன்ற தவறான கருத்துக்கள் சிறுவர் சிறுமியரின் உள்ளத்தில் தோன்றத்தக்ககாரியங்கள் எதையும் பெற்றோர் செய்யலாகாது. (ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்துரிமையில் பாரபட்சமுற்பட.)

20. 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' உலக வாழ்க்கையில் மனிதர்யாவரும் எவ்வகையிலும் 'சரிநிகர் சமம்' என்னும் சீரிய 'சமதர்மக்கொள்கை' அவர்கள் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும்வண்ணம் அப்போதைக்கப்போது அவர்களுக்கும் புகட்டிவரல்வேண்டும்.

தோழர்காள்! மேற்கண்ட இம்முறைகளுக்கிணங்க பெற்றோர் தம் ஆண், பெண், குழந்தைகளைப்பயிற்றுவார்களானால் வருங்கால இந்தியாவில் நம்மக்கள் வறுமையின்றியும், நோயின்றியும், மூடக்கொள்கைகளின்றியும், அடிமைவாழ்க்கையின்றியும், இன்பவாழ்வைப்பெற்றோராயும் வாழ்வர்! அக்காலத்தில் இந்நாட்டில் ஆயிரக்கணக்கான நெப்போலியன்களும், லெனின்களும், கமால்பாஷாக்களும், தாகூர்களும், ஜகதீசவசுக்களும், டிவேலராக்களும், ஆமிஜான்சன்களும் தோன்றி நாட்டை அலங்கரிப்பர். அக்காலத்தில்தான் இன்னாடு நம்முன்னோர்கள் ஏட்டில் எழுதி வைத்திருக்கும் வண்ணம் என்னாட்டிலும் மேவிய நன்னாடாய்—பொன்னாடாய்—புகழ்நாடாய் இலங்கும் என்பது திண்ணம்.

அவ்வாறின்றி பெரியோரும், சிறியோரும், பண்டிதரும், பாவலரும் எட்டு மகிமையைப்பேசி இன்புற்று பொழுது போக்குவாராயின் அச்செயல் ஏட்டில் சுரைக்காய் என எழுதிக் கறிசமைக்கும் கதையையேயொக்கும்.

# "தாத்தாவின் பிள்ளையார் பூஜை."

[உ. க.]

3,30000000 இல்லை; கடைசி '0' ஐ எடுத்து விடுங்கள் வேண்டாம்: இன்னும் ஒரு '0' சேர்த்து வாசியுங்கள். சே! எதற்கும் சந்தேகம் கூடாது. பெரிய தொகைகளை எழுத்தால் குறிப்பிட வேண்டுமென்பது விதியல்லவா? ஆம்; நமது இந்து மதத்தில் "முப்பத்து முக்கோடி" தேவர்கள் உண்டல்லவா? எனக்குத் தெரியாது, பெரியவர்கள் எழுதிவைத்திருக்கிறார்களாம். அத்தனை தெய்வங்களிலே எங்கள் தாத்தா எந்தத்தெய்வத்தை அனுதினமும் பூஜைசெய்து வருகிறார் தெரியுமா? அவருக்குப்பிடித்தது "விநாயகமூர்த்தி" தெய்வம்.

சகல "விக்கினங்களையும் நிவர்த்தித்து மங்களகரமாகக் காரியம் முடியவேண்டுமானால் விக்கினேஸ்வர மூர்த்தியைப்பூஜிக்க வேண்டும் என்று தாத்தா அடிக்கடி சொல்லுவார். தாத்தா அப்படி எண்ணிக்கொண்டு தான் தினமும் யானைமுகக்கடவுளை பூஜை செய்கிறார். ஆனால் தாத்தாவுக்குப்பற்கள் ஒரு காலத்தில் இருந்தன அப்புறம் அவை முளைக்கவேயில்லை. பெரிய கடியாரத்திலே "பெண்டுலம்" ஆடிக்கொண்டிருக்குமே, அதேமாதிரி தாத்தாதலை சதாகாலமும் விநாடியைக் குறித்துக்கொண்டேயிருக்கும். தாத்தா அதை நிறுத்துவதே கிடையாது. அவரால் முடியாது என்று எங்களுக்குத்தெரியும்.

ஷை தாத்தாவின் "விக்கினங்களை" (குறைகளை) நாளதுவரை விக்கினேஸ்வர மூர்த்திகவனிக்க பாடில்லை! தாத்தாவும் விநாயக பூஜையை நிறுத்துவதில்லை!

தாத்தா வெள்ளியிலே விநாயகர் மாதிரி செய்து அதைஎதிரேவைத்துக்கொண்டு பூஜைசெய்வார். முட்டாள், என்தங்கை ராஜம்! மரப்பாச்சி பொம்மைக்கும் வெள்ளிப்பிள்ளையார் கடவுளுக்கும் வித்தியாசம் தெரியாமல் வெள்ளிப்பிள்ளையாரை தெருவில் வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தாள். இந்த சமாச்சாரம் தாத்தாவுக்குத் தெரியவே தெரியாது. தெரிந்திருந்தால் வெள்ளி உலோகத்தின்மூலம் காட்சியருளும் பிள்ளையார், வீட்டை விட்டுத் தெருவுக்குத் வந்திருப்பாரா?

ராஜத்தின்கையில் வெள்ளிவிநாயகர் இருப்பதை எதிராத்துக்குழந்தை (வயது பத்தொன்பது) சீனுபார்த்துவிட்டான். அழகான பீங்கான்பொம்மையை ராஜத்தின் கையில்கொடுத்துவிட்டு வெள்ளி விநாயகரை பக்திரசத்தோடு தூக்கிக்கொண்டான். எங்கள் தாத்தாவுக்கு ஒருவிதநன்மையையும்செய்யாத அந்த நன்றிகெட்ட பிள்ளையார் குழந்தை சீனுவுக்கு வட்டிக்கடை செட்டியாரிடமிருந்து பரிக்ஷைக்கு பிரவேசக கட்டணப் பணம் வாங்கிக்கொடுத்தது. தர்மப்பிரபுசெட்டியார் சீனுவுக்குப் பணம் கொடுத்தார். செட்டியார் ஏற்கனவே வாங்கிவைத்திருந்த அடமான நகைகள் இருக்கும் பெட்டிக்குள் எங்களாத்து நன்றிகெட்ட பிள்ளையார் போய்ப்படுத்துத்தூங்குவதாக சீனுவின் தாயாரே ஒரு நாள் சொன்னாள்! எங்களிடத்திலல்ல— வெள்ளிப்பிள்ளையார் வட்டிக்கடை செட்டியாரது நகைப்பெட்டிக்குப்போன தினத்திலிருந்து எங்கள் தாத்த விக்கிரக ஆராதனையை அடியோடு ஒழித்துவிட்டார் வெள்ளிப்பிள்ளையார் இருந்த இடத்தில் தற்காலிகமாக சாணி உருண்டையையோ, அன்றி மணல் குவியலையோ, வைத்துப்பூஜையை முடித்துக்கொள்வார். ஒரு நாள் தாதா நிஷ்டையில் உட்கார்ந்திருந்தார். எதிரேபிள்ளையார் ரூபமாக தாத்தாவுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டிருந்தது ஒரு சிறு அச்சு வெல்லம்!

வெல்லத்தின் தலையில் பூஜை வைத்துத்தாத்தா அதைசாக்ஷாத்பிள்ளையாராகப்பாவித்தார். ஆனால் நான் அதை வெல்லமாகவேஎண்ணினேன். பெரியவாள் நிஷ்டையில் இருக்கும்போது சிறியவர்கள் தொந்தரவு செய்யலாமா? பெரியவர்கள் தபசைக் கலைக்க நானென்னமாரீசனா? தாத்தாவின் பூஜைக்குப்பங்கம் வராமல் சிறிய சுருக்குப்போட்ட கயிற்றை வெல்லப்பிள்ளையார்மேல் வீசினேன். அவ்வளவுதான். அடுத்தக்ஷணம் வெல்லப்பிள்ளையார் அன்புருக்கொண்டு எனது அருகில்—தாத்தாவின் பூஜையை ஏற்றுக்கொள்ளாமல்—வேகமாக வருவாராயினர். விநாயக மூர்த்தியைத் தாத்தா இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று புத்திமதி கூறுவார். நான் இருதயத்தின் வழியாக வயிற்றில் வைத்துக்கொள்ளத் தீர்மானித்து, வெல்லப்பிள்ளையாரை பின்னப்படுத்தாமல் அப்படியே எடுத்துவாயினுள் போட்டேன். பிள்ளையார் இருதயத்திற்குக்கூடபோகவில்லை. தாத்தாவின்நிஷ்டைகலைந்துவிட்டது. கண்விழித்தார். தம்மால் பிரதிஷ்டை செய்யப்பட்ட வெல்லப் பிள்ளையார் அந்தரத்தியான மாயிருப்

பதைக்கண்டார். கண்டது தான்தாமதம்!

பாருங்கள்! கிழட்டுக்கரங்களினாலே ஓங்கி என்பிடரியில் அறைந்தார். தாத்தாவின் பூஜாபலத்தினால் என்வாயினுள்ளேதான் வெல்லப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கவேண்டுமென அவரது ஞான திருஷ்டி காட்டிவிட்டது. இதோ, உங்கள் வெல்லப்பிள்ளையாரை

"இல்லை, தாத்தா! எடுத்துக்கொள்ளுங்கள்" என்று தாத்தாவின்முன்னாலேயே பிள்ளையாரை துப்பினேன். நான்கீழேவிட்ட பிள்ளையாரைத் தாத்தா கையால் தொடக்கூட சம்மதிக்கவில்லை.! அப்பிள்ளையாரை எறும்பும் ஈக்களும் பூஜை செய்யத்தொடங்கின.!

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

சற்று விபரமாக எழுதியும் இருக்கின்றோம். இதுகளைப் படிக்காமலே திரும்பத் திரும்பக் கேள்வி கேட்பதில் யாருக்கு நன்மை யெனக் கேட்கின்றோம்? தங்களுக்குத் தாங்களே மெய்ஞ்ஞான முறையைக் கையாடுவார்களேயாகில் "எந்தத் தெய்வீகச் செயலும்" சாதாரணச் செயல்களாக மதிக்கவேண்டிவரும். திருஷ்டாந்தமாக டர்பான் நிருபர் நெருப்பு மிதிக்கும் படத்தை அனுப்பி இருக்கின்றார். அந்தப் படத்தைக் குறித்தே அதே பத்திரிக்கைகளில் இந்த விளையாட்டுகளெல்லாம் தந்திரமென எழுதியுள்ளது. திரேக முழுமையும் ஊசிகளைக் குத்திக்கொள்ளும் பழக்கத்தால் எனவும் கண்டுள்ளது. முதலில் கொஞ்சமாகக் குத்திக்கொண்டு அந்தக் காயம் ஆறினபிறகு ஆறின இடத்திலேயே குத்திக் கொண்டால் பாதை தெரியாது. இதுதான் முள்ளைக் குத்திக்கொள்வதிலும், முள் மேல் நடப்பதிலும் அலகு, தாடையிலும், நாக்கிலும் குத்திக்கொள்வதிலுமுள்ள ரகசியம். இந்த விளையாட்டுகளைத் தெய்வீக மெனக் கருதும் மாந்தரை நாம் ஒன்று கேட்கின்றோம். இதனால் யாது பயன்? விளையாத நிலம் விளையச் செய்யுமா? காலத்தில் பெய்யாத மழையைப் பெய்யச் செய்யுமா?

[New Zealender) நியூசிலண்டர் ஒருவன் தன் நாயகியை சோரம் செய்தாளென்று கொன்றுவிடுகின்றான். இதனைக் கண்ட சோரநாயகன் மேலுலகத்தில் அவளுடன் தானும் போய்சேர தற்கொலை புரிந்துகொள்கின்றான். இவ்விருவர்களைகளையும் அவ்வுலகில் சேரவொட்டாமல் தடுக்க நாயகனும் தற்கொலை செய்துகொள்கின்றான். இது என் பைத்தியம் என்று கேட்டால் நீயும் எங்களுடன் தற்கொலை புரிந்துகொண்டு எங்களுடன் வந்தால் உண்மை விளங்குமென்றான். அது போல மூட நம்பிக்கைகளைப் பொய் நம்பிக்கை என்றால் நீரும் எங்களுடன் நம்புங்களென்று சொல்வது போல் நமது நிருபர்கள் பிடிவாதம் செய்கின்றார்கள். நியூசிலண்டரைப் போல் தங்கள் யுக்தி, புத்தியைத் தண்ணீரில் கரைத்துவிட்டுப் பகுத்தறிவையும் தற்கொலை செய்துகொள்வோரை எப்படி திருப்தி செய்ய முடியும்? யாரால் அவர்களைத் திருத்தமுடியும்? நமது நிருபர்களுக்கு வோரே விடைதான் நாம் அளிக்கக்கூடும். அதாவது:—

"who will absolve you from this ignorance? Only study and reflection." உங்களுடைய அறியாமையை யார் விலக்கக்கூடும்? கல்வியும், விசாரணையுந்தான் உங்கள் அக்கியானத்தை விலக்கமுடியமென்போம்.

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேல்லூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துறை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி
ராஜவீதி.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி.

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

Read.
*The 'Citizen'*
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

## திரு. சிதம்பரம்பிள்ளை அவர்கள் 60ம் ஆண்டு விழா.

நிகழும் 1932ம் ஞு செப்டம்பர் மாதம் 3ந்தேதி சனிக்கிழமை நமது திரு. வி. ஓ. சிதம்பரம்பிள்ளையவர்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு நாளாதலால் அந்நாளை விசேஷமாக நம்மவர்கள் கொண்டாடவேண்டுமென்றும் அக்கொண்டாட்டத்தில் ஓர் உபசாரப்பத்திரமும், ஒரு பணப்பையும் பிள்ளையவர்களுக்கு அளிக்கவேண்டுமென்றும் 25—8—32ல் நடந்த பொதுஜனக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதையும், அக்கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்துமுடிப்பதற்கு திரு. ஏ. சி. பால்நாடார் அவர்களைத் தலைமையாகக்கொண்ட கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதையும் எல்லாரும் அறிவார்கள்.

திரு. பிள்ளையவர்களுக்கு ஓர் பணப்பை அளிக்கவேண்டுமென்று முதல்முதல் கோரிய டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள் விருப்பப்படிக்கும், பிள்ளையவர்கள் பணப்பைக்குப்பணம் அளிக்க விரும்புவோர்களில் பலர் கேட்டுக்கொண்டபடிக்கும் பிள்ளையவர்களுக்குப் பணப்பையும், உபசாரப்பத்திரமும் அளிக்க வேண்டிய நாளை வருகிற அக்டோபர் மாதத்தில் ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்பதையும், அந்தத்தேதி இன்னதென்பதைப் பின்னர் அறிவிக்கப்படுமென்பதையும் இதன் மூலமாகத்தெரியப்படுத்திக் கொண்டோம்.

எ. மாசில்லாமணிப்பிள்ளை
காரியதரிசி.

## இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, விரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளை கொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

## தென்னாப்பிரிக்கா புதிய ஏஜண்டு.

நெட்டால்; தர்பன்; துறைமுகத்தில், புதன் கிழமை 3—8—1232.ல் "எஸ்; எல்" காஞ்சா" என்னுங் கப்பலில், சர். கே. வி. ரெட்டி அவர்களுக்குப் பிறகு புதிய ஏஜண்டு தோழர் கண்ணுவாமரராஜ்சிங் அவர்களும், அவரது நற்றுணைவி, கண்ணுவாராணியும், மகவுமாக மூவரும் சித்தா துறையில் வந்திறங்கினார்கள். அக்காலை கப்பலண்டை பலர் சூழ்ந்திருந்து நல்வருகையுடன் உவந்தேற்று புஷ்பமாலை சூட்டி மனமார்ந்த நல்வரவு கூறியபிறகு, ஏஜண்டு கூறிய பதிலாவது,—

இத் தென்னாப்பிரிக்காவுக்கு விஜயமுற்றதற்கு எனக்கு அத்தியந்த சந்தோஷமுண்டாயிற்று. பல்லாண்டுகளாக உங்கள் விஷயத்தை கருத்தான்றி கவனித்துள்ளாம். எனினும் உங்களுடைய உதவியைக்கொண்டும், மற்றும் இருவகுப்பாருடைய உதவியைக் கொண்டும், இந்தியர்களின் இடுக்கண்களைச்சிலது எவ்விதத்திலும் ஒழிக்க வேண்டுமென்று விளக்கியபிறகு மோட்டாரில்ஏறி தங்குமிடம் மரின் ஓட்டேலுக்குச் சென்றனர். அன்று மாலை ராவுட்ஸ்ஹாலில் நல்வரவு கூறப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கோவில் என்பது குச்சுக்காரர் விடுதி

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

### மாதர் சுதந்திரம் அல்லது

## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)
கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.



## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
" வெளிநாடு 1—8—0.

மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.



## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.



தபால் படிப்பின் அற்புதம்.

## 1000-மாணவர்கள்.

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸை தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர் ஹையர்கிரேட் உபாத்திமார்கள், குமாஸ்தாக்கள், ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்பிரயோஜனமானது. பிராஸ் பெக்டசுக்கு உடனே ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,
அன்டையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி S. I. R.


## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அநேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணு 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம். இதன் விலை அணு 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது. இதன் விலை அணு 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது. இதன் விலை அணு 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது. இதன் விலை அணு 0—2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ். ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணு 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.